பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | "வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 13 | ஞாயிற்றுக்கிழமை | (29.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 254

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வழங்கிய

# தமிழ் இளைஞர் ஒருவர்

# கொழும்பில் சுட்டுக் கொலை

### அதிகாலை தலைநகரில் பரபரப்பு



(நமது நிருபர்)

இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்களை வழங்கி வந்த சுரேஸ் என்று அழைக்கப்படும் திஸ்ஸ வீரசிங்கம் துஷ்யந்த குமார் (31 வயது) என்னும் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பு புறநகர்ப் பகுதியான பொரளஸ்கமுகவில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு புறநகர்ப் பகுதியான விபிலியான வீதியில் பொரளஸ்கமுக பகுதியில் உள்ள அவரது வீட்டை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த துப்பாக்கி நபர்களே திஸ்ஸ வீரசிங்கம் துஷ்யந்த குமாரை சுட்டுக் கொன்றுவிட்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட திஸ்ஸ வீரசிங்கம் துஷ்யந்த குமார் வீட்டில் உறக்கத்தில் இருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றபோது, அவரது மனைவியும் வீட்டில் இருந்தபோதும் காயங்கள் எதுவும் இன்றி தப்பிச் சென்றுவிட்டார் என்றும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் குண்டு ஒன்றை வெடிக்க வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுட்டுக் கொலைசெய்யப்பட்ட நபர் உத்தியோகபூர்வமாக இராணுவத்தினருக்கு தகவல்களை வழங்கி வருபவராக இருந்து வந்தபோதும் அது தொடர்பாக எந்தவித

(10 ஆம் பக்கம் பார்க்க)



13 வருடங்களுக்குப் பின்னர் மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்த் திருவிழாக் காட்சி.

# தகவல் வழங்குபவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!

### ரணவிராஜா இராணுவத்தினருக்கு உத்தரவு

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்களை வழங்கிவருபவர்களை பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்தினருக்கு உண்டு என்று நீதி மற்றும் சமாதானம் தொடர்பான மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்துள்ளரர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் வழங்கி வந்த தமிழ் இளைஞர் ஒருவர் கொழுமபில் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞர், வெளியில் இருந்து கொண்டு இராணுவத்தினருக்கு தகவல்

(10 பக்கம் பார்க்க)

# ஹபரண கிரிவடுவவில் நேற்று கோர விபத்து

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் பலி; ஆறு பேர் காயம்

(கொழும்பு)

ஹபரண கிரிவடுவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளனர். பேருந்து ஒன்றும் மினிபஸ் ஒன்றும் மோதிக் கொண்டதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் மேலும் 6 பேர் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர்கள் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்துக்கு சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை வவுனியாவில் ஹையஸ் ரக வானும், துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் வவுனியாவை சேர்ந்த பாலகிருஸ்ணன் கிருஷ்ணகுமார் (வயது 18) என்பவரே உயிரிழந்தவராவார்.

(இ-8)

# புரிந்துணர்வு உடன்படிக்கையை பேண கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்

### அரசுக்கும் புலிகளுக்கும் கேணல் சுமேத பெரேரா வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்று அமுலில் இருக்கும்போது இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அரசும், விடுதலைப் புலிகளும் கூடிய கவனம் செலுத்துவதுடன் விடுதலைப் புலிகள் தகவல்கள் வழங்குபவர்களை கொலை செய்வதில்லை என முடிவெடுக்கவேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சுட்டுக்கொல்லப்

(10 பக்கம் பார்க்க)

# நாட்டில் முதல் ஏழு மாதத்தில் 738 கொலைச் சம்பவங்கள்

### பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தகவல்

(கொழும்பு)

கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களுக்கு பாதாள உலகக் கோஷ்டியினரும் அண்மையில் சிறையில் இருந்து வெளியேறியவர்களும் விடுதலைப் புலிகளின் உட்கட்சிப் பூசல்களுமே காரணம் என பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இக் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா

(10 பக்கம் பார்க்க)

### கண்ணிவெடிகளுக்கு எதிரான

# ஜெனீவா சர்வதேச மாநாட்டில் விடுதலைப் புலிகளும் பங்கேற்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெற்ற கண்ணிவெடிகளுக்கு எதிரான சர்வதேச மாநாடு ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த பெண் போராளிகள் இருவர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸில் செயற்படும் 'ஜெனீவா கோல்' என்ற அரச சார்பற்ற நிறுவகம் ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில், உலகில் கண்ணிவெடிகளை இல்லாதொழிப்பது, மற்றும் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பது ஆகியன குறித்து விரிவாக

(10 பக்கம் பார்க்க)

# அரசின் செயற்பாட்டில் தமிழருக்கு சந்தேகம் உண்மைநிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

**சமாதானம் குறித்த அரசாங்கத்தின் போக்கில் தமிழ்மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

**காலதாமதம் இன்றி அரசாங்கம் பேச்சுவார்த் தையை ஆரம்பிக்க வேண்டும் எனவும் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து கேட்ட போதே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் கருத்து வெளியிடுகையில்:

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதை இனிமேலும் தாமாதிக்கக் கூடாது. அவ்வாறு தாமதிப்பதனால் மேலும் பல நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துவிட்ட நிலையில், இனிமேலும் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான இனவாத சக்திகளின் எதிாப்புக்களை அரசாங்கம் எதிாகொண்டு முறியடிக்க முன்வர வேண்டும். அவாகளுக்கு உற்சாகம் ஊட்டுவதை தவிர்க்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுபபினா சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்;

பேச்சுவார்த்தை தாமதிக்கப்படுவதனால் அரசாங்கம் பாதகமான விளைவுகளையே எதிர்கொள்ள நேரிடும். பேச்சுவார்த்தைக்கு தயார் என்று புலிகள் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில் ஜனாதிபதி இன்னமும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றார். அத்துடன் சர்வதேச சமூகத்திற்கும் ஜனாதிபதி தவறான பிரசாரங்களையே மேற்கொண்டுவருகின்றார்.

இராணுவம் கிழக்கு மாகாணத்தில ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அது குறித்து ஜனாதிபதி மௌனமாக இருக்கின்றார். பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் படையினர் மத்தியில் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இவையனைத்தும் தமிழ் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. இனவாத சக்திகளை முறியடிப்பதற்கு அரசாங்கம் திராணியற்றதாகவே இருக்கின்றது என்றார்.

கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதம கொறடாவுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்;

மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதை அரசாங்கமே உறுதிசெய்ய வேண்டும். அது புலிகளின் கைகளில் இல்லை. பிரதிப பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீரவும் பொறுப்பற்ற விதத்தில் பேசி வருகின்றனர். சமாதானத்திற்கு எதிரான சக்திகளுக்கு ஆதரவு வழங்குவது போன்று அவர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இதனால் அரசாங்கத்தின் போக்கில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த உண்மையான நிலைப்பாட்டை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றார். (ந)


## சிறுவிளம்பரங்கள்

**மணமகன் தேவை**

யாழ்.இந்து வேளாளர் 41வயது பரணி மேட ராசி 5'2'' உயரம் 12 இல் செவ்வாய் **M.B.B.S.** டாக்டர் விவாகரத்தாகி 4 வருடங்கள் அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிடமாகியுள்ள மணமகளுக்குத் தகுதியான பட்டதாரி மணமகன் தேவை.

* * *

இந்து வேளாளர் 32 வயது நோர்வேயில் குடியுரிமையுடைய மூலம் தனுசு ராசி 7 இல் செவ்வாய் 5'4'' உயரம் **A/L Bio Science,** மினிஸ்ரியில பணிபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

* * *

இந்து வேளாளர் நோர்வே குடியுரிமை 35 வயது 2இல் செவவாய 5அடி உயரம், கார்த்திகை இடப ராசி **A/L Bio Science,** அரசமருத்துவ மனையில் பணிபுரியும் மணமகளுககு படிதத பண்பான மணமகன் தேவை.

தொடர்புக்கு - சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். **T.P.** 021-222-7844. (8761)

**திருமண சேவை**

சிவாலயாவின் பக்தி வணக்கம். உலகெங்கும் வாழும் தமிழ் மணமக்களுக்கான சேவை. இந்து, கிறிஸதவ சமூகத்தவரின் உறவுப் பாலமாக நாம் செயல்படுகின்றோம். எமது சேவை உலகெங்கும் விரிவு படுத்தப்படுகின்றது. மேலும் விபரங்களுக்கு அமைப்பாளர், **S.K.**சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர்.
**T.P.** 021-222-7844. (8762)




மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவத்தின் சில காட்சிகள்.

### சமூக விஞ்ஞான வட்டத்தின் மாதாந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாதாந்தக் கருத்தரங்கில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 930 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் 'வட-கிழக்கின் பேண்தகு அபிவிருத்திக்குப் பொருத்தமான தந்திரோபாயம்' எனும் விடயம் குறித்து கருத்துரை வழங்கப்படவுள்ளது.

கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தன் நிகழ்த்தவுள்ளார். இதனையடுத்து, துறைசார்ந்தோர், ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோருடன் இதுவிடயம் தொடர்பாக பேரா சிரியர் கலந்துரையாடுவார். (ந)

### பூரணை தினவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஸ்ண சேவாச்சிரம சங்கத்தின் ஆவணிப் பூரணை தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோண்டா வில் பொற்பதி வீதிலுள்ள தாயகம சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (ந)

### திறப்பு விழா

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் முகப்பு மண்டபத திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு தொம்மையப்பு யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்மறை மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் இது வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி மண்டபம் ஆலய பங்கைச் சார்ந்த திரு, திருமதி அந்தோனிப்பிள்ளை பீற்றர் யேசுதாசன் குடும்பத்தினரின் தாராள அன்பளிப்பில் கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ந-5)

### சந்திப்பு

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரியின் சங்கீதத்துறையைச் சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட முகிழ் நிலை ஆசிரியர்கள் மற்றும் உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள சங்கீத ஆசிரியர்கள் அனைவரும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு கல்லூரியின் சங்கீதத் துறை ஆசிரிய கல்வியியலாளர் திருமதி வி.நரேந்திராவை கல்லூரியில் சந்திக்குமாறு பீடாதிபதி தி.கமலநாதன கேட்டுள்ளார். (ந)


**ST.JOHN'S COLLEGE, JAFFNA.**

**CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.**

**ADMISSION - 2005.**

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.
2. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2004 முதல் 15.09.2004 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15.09.2004 க்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண் ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.09.2004. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரட்கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 400.00
7. வயதெல்லைகள் அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.1999 க்கும் 31.01.2000க்கும் இடையல் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1994 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப்பரீட்சை : தரம் 6 வகுப்புக்கு 09.10.2004 காலை 9.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புகளுக்கான விண்ணப்பங்களையும் காரியா லயத்தில் இதே நாட்களில் பெற்றுக்கொள்ளலாம், பரீட்சை மார்கழியில் நடாத்தப்படும். வெற்றிடங்களைப் பொறுத்தே விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும்.

அதிபர்கள் (C/419)

# நல்லூரான் திருவடிக்கு



## ஒன்பதாம் திருவிழா
## நல்லை நகர்க் குமராகலி நலியாவருள் தருவாய்

பல்லூர்த்தலை பலிஏற்றுழல் பரமன்தரு புலவன்
நல்லூர்தனில் நலமாயுறை கடம்பன்கழல் நயந்தால்
கல்லூர்ப்புயக் கடவுள்வர விடுதூதுவர் கனன்று
சொல்லால்கூட மொழி கூறியும் அழைத்துச்செலத் துணியார்

தொல்லைபதி துயரச்சுவை தெரியாயாழ் நகரில்
நல்லைப்பதி அமர்நாதனார் நடமாடவும் நலிக்கும்
அல்லற்றுயர்ச் சுவைஆழியில் அழக்கண்டறிக் தறியா
நல்லைநகர்க் குமராகலி நலியாவருள் தருவாய்

நல்லூர்க்கொடி உயரும்பெரு விழாநற்றிரு விழாவாம்
பல்லூர்களும் பயில்பண்ணிசை பரதக்கலை இயங்கள்
கல்லென்றொலி ககனம்கடந் தமரர்செவி மடுக்கும்
நல்லைநகர்க் குமராகலி நலியாவருள் தருவாய்.

சிவ.சண்முகவடிவேல்.

## நல்லூரின் நாயகனே

சிங்க வடிவினனாய்த் தோன்றி சீறியே அசுரரையழித்த
வங்க கடல் கடைந்த வரம்பல தரும் மாதவனும்
திங்கள் சூடிய சிவன் மகனாய் திகழ் முன்முகன் நீயும்
எங்கும் நிறைந்த ஒருவனென ஏத்தினேன் நல்லையூரா
அருள்வாயே

சுந்தர செந்தமிழொலியும் சுகந் தழு வேதவொலியும்
பந்தம் அறுத்திடும் கீதவொலியும் பலவாத்திய வொலியும்
எந்த நாளும் நல்லூரிற் கேட்டு எழில் பொங்கு வேலா
எந்தனையும் ஆண்டு நின்னருள் பொழிந்திடுவாயே

பல்லோரும் போற்றும் நல்லூரின் நாயகனே
அல்லலறுத்து ஆளும் ஆறுமுகப் பெருமானே
பொல்லா வினையறுத்து அருள் பொழிந்து
வேல்கொண்டு வந்திடுவாய் வேந்தர் வேந்தே.

நீர்வை மயூரகிரி.

## சித்தியே அருள்வாய்

முத்தமிழின் வித்தான முருகா
எத்திக்கும் எமையாளும் முருகா
பத்தியால் யானுனைப் பணிகிறேன்
சித்தியே அருள்வாய் முருகா

ரதிகா.

## நல்வழி தந்திடுவாயே

நல்லை முருகா திருமால் மருகா
வெல்லும் மயிலில் வருவாய் முருகா
தந்தைக் குரைத்த ஞானச் சுடரே
நொந்து இரந்தோம் நல்லூர் முதலே

என்றும் உன் புகழ் பாடிட வேண்டும்
எல்லாம் நற்செயல் ஆகிட வேண்டும்
வல்லோன் நீயென வந்திடும் அடியார்
வாழ்ந்திட நல்வழி தந்தருள் வாயே.


விமலநாதன்.

# இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி அமைப்பு முறையே சிறந்தது

## முன்னாள் ஒன்ராரியோ முதல்வர் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தற்போதைய



நிலைப்பாட்டில் சமஷ்டி அமைப்பு முறையே சிறந்தது எனச் சுட்டிக் காட்டியுள்ளார் சமஷ்டி அமைப்பின தலைவரும், முன்னாள் ஒன்ராரியோ முதல்வருமான பொப்ரே.

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து இவர் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

கனடிய அரசியல் விஞ்ஞான பீடப் போதனாசிரியர் கலாநிதி டேவிட் கமரூனும் இதில் கலந்து கொண்டார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படுவதன் அவசியம் குறித்து பொப்ரே விரிவாக விளக்கமளித்ததாகவும், இருதரப்பினரிடையேயான பேச்சுக்கள் மூலம் மட்டுமே இப்பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்படலாம் என்பதை மையப்படுத்தியே பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற இத்தகையதோர் சந்திப்பின் அடுத்த கட்டமாகவே இச் சந்திப்பு கருதப்பட்டதாகவும், இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் சர்வதேச நாடுகளின் கருத்தும் விளக்கமும் என்ன என்பதைத் தெளிவாக்குவதே இவர்களது முதன்மையான நோக்கமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட சு.ப.தமிழ்ச்செல்வன்,

தமது தரப்பு மிக நேர்மையுடனும் தெளிவுடனும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளை முதலில் கவனத்தில் எடுப்பதற்காக மட்டுமே இடைக்கால நிர்வாக சபை குறித்த திட்டமொன்றை ரணில் அரசிடம் கையளித்ததாகவும் குறிப்பிட்டார்.

இருப்பினும், ரணில் அரசு தமது இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக அலகை ஆராய்வதற்கு முன்னதாகவே, ஜனாதிபதி சந்திரிகா அரசியல் குழப்ப நிலையைத் தோற்றுவித்ததாலும் அதற்குப் பின்னர் உருவான அரசியல் மாற்றங்களாலும், தற்போது தெற்கில் தமது இடைக்காலத்தீர்வு குறித்து தவறான பிரசாரம் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஒரு கட்சியாக, விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமது சமாதான முயற்சிகளில் ஆர்வத்துடனேயே இருக்கிறார்கள். சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோர்வே பிரதிநிதிகளுக்கு அரசு ஒரே குரலில் தங்களது விருப்பத்தைத் தெரிவித்து அவர்களை மீண்டும் சமரச முயற்சிகளை மேற்கொள்ளப் பணிக்க வேண்டுமென்பதே தங்கள் விருப்பம் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும தெரிவித்துள்ளார். (ற-121)

# மக்கள் விடுதலை முன்னணியால் அரசினுள் தொடர்ந்தும் குழப்பநிலை

(கொழும்பு)

அரசாங்கத்தின் கூட்டுக் கட்சியாக இருந்துவரும் மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்துக்குள் தொடர்ந்தும் எதிர்ப்புக்குரல் எழுப்பிவருவதாக சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

ரயில்வேத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 8வது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினுள் மக்களின் நியாயத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது, தமது கட்சி எதிர்ப்புக் குரல் எழுப்பி வருகின்றது.

இன்று நாட்டில் பல்வேறு முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் யோசனைகளை முன்னெடுப்பதற்கும் ஐக்கிய அரசாக செயற்பட வேண்டிய அவசியம் தோன்றியுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படையான பேச்சுவார்த்தைகள் நடைபெறாமையே பெரும் பிரச்சினையாக இருக்கின்றது என்றார்.

ஒருவேளை, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் அவற்றை தலைவர்களால் கூட ஜீரணிக்க முடியாமல் போய்விடும் எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், பேச்சுவார்த்தையின் போது இன்னோரன்ன பிரச்சினைகள் குறித்து அமுல்படுத்தப்படுவதாகவும், அதேவேளை, பேச்சுவார்த்தைகளின் போது சிலர் இடைநடுவில் வெளியேறிவிடுவதாகவும் கவலை தெரிவித்துள்ளார். (ற-8)

# திருமலை மீனவர்கள் மீது படையினர் தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலையில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

மீன்பிடிப்பதற்காகக் கடந்த புதன்கிழமை காலை கடலுக்குச் சென்றபோதே ஸ்ரீலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து அச்சமடைந்த மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களை கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர். இதனால் மீனவருக்கு பெருமளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ற)

# கிராம மட்டங்களில் த.தொ.நுட்ப நிலையம்

(கொழும்பு)

கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் "விஸ்வஞான கேந்திரம்" என்ற பெரில் தகவல் தொழில் நுட்ப நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இந்நிலையங்களில் இருந்து தொலைபேசி, கணனி மற்றும் அச்சுவேலை ஆகிய பல்வேறு சேவைகளை கிராம மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற-க,60)

# நல்லைச் சூழலில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில், தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை நடாத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கில் 9ஆம் நாளான இன்று, வேல்விழி சுப்பிரமணியத்தின் இசைக்கச்சேரி இடம்பெற்றுள்ளது.

அத்துடன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால், நாவலர் மணிமண்டபத்தில் தினமும் இரவு 7.00 மணிக்கு நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்று ஆசிரிய ஆலோசகர், சைவப் புலவர் கந்த சத்தியதாசனின் "வாழ்க்கையில் திருமுறை" எனும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (ற-7)

# இணையத்தொடர்புதுண்டிப்பிற்கு இந்தியக் கப்பல்காரணமல்ல

(கொழும்பு)

இலங்கைக்கான இணையத் தொடர்பு மற்றும் 35 நாடுகளுடனான தொலைத் தொடர்புக்கான கடல்கீழ் தொடுகம்பியை அறுத்த இந்தியக் கப்பல் தரப்பு, ஐந்து மில்லியன் ரூபாய்களை நட்டஈடாக வழங்க வேண்டும் என இந்தியக் கப்பல் நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்தியாவின் 'ஸ்ரேட் ஒப் நாகலாந்து' என்ற இக் கப்பல் கடல் கீழ் தொடுகம்பியை மோதி அறுத்தது என்றும் இதனால் இலங்கைக்கான இணையத் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டது என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எட்டு இலட்சம் பாவனையாளர்கள இதனால் பாதிக்கப்பட்டார்கள். தமக்கு ஐந்து மில்லியன் ரூபாக்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

எனினும் நேரில் சென்று சம்பவம் நடைபெற்ற பகுதியினை இருசாராரின் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆராய்ந்த போது, கடலின் கீழுள்ள தொடுகம்பி அறுந்ததாக நம்பப்படும் நேரத்தில், குறிப்பிட்ட இந்தியக் கப்பல் ஒன்பது கடற்கோள் மைல்கள் தள்ளியே பயணித்துக் கொணடிருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து வழக்கை மீண்டும வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா சார்பில் ஆஜரான வழக கறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்தியக் கப்பலான 'ஸ்ரேட் ஒப நாகலாந்து' இன் நிறுவனத்தின் சார்பில், கொழும்பில் உள்ள முருகேசு-நீலகண்டன் சட்டத்தரணிகள் ஆஜரானார்கள்.

தமது நிறுவனத்தின் மேல் பதியப்பட்ட வழக்கின் காரணமாக ஏற்பட்ட தாமதம், இழப்புக்கள், கப்பலின் பெயருக்கு ஏற்பட்ட களங்கம் என்பன குறித்து தமது தரப்பிலிருந்து என்ன நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பது குறித்துக் கருத்துக்கூற இவர்கள் மறுத்து விட்டதாகத் தெரியவருகிறது. (ற)

## இன்று ஒரு தகவல்

# கடவுச்சீட்டு

'இந்த உலகமே எனக்குச் சொந்தம்' இப்படிச் சொல்வது விசாலமான மனதைக் காட்டுகின்றது என்பது உண்மைதான். இருந்தாலும் நடைமுறையில் அதில் கொஞ்சம் சிக்கல் உள்ளது.

இப்போது ஒரு நாட்டிலிருந்து இன்னுமோர் நாட்டுக்குப் போகவேண்டுமென்றால் நாம் நினைத்தவுடன் யாருடைய அனுமதியும் இல்லாமல் போகமுடியுமா? நமது நாடு " நீ போகலாம்" என்று கூறவேண்டும். இன்னுமொரு நாடு. "நீ வரலாம்" என்று கூற வேண்டும். அதன் பின்பு தான் பயணத்தையே ஆரம்பிக்க முடியும். நமது நாடு நீ போகலாம் என்று சொல்கிறது பாருங்கள். அதுதான் பாஸ்போர்ட் கடவுச்சீட்டு. அந்தநாடு நீ வரலாம் என்று சொல்கிறது பாருங்கள். அது தான் விசா.

அந்தக் காலத்திலெல்லாம் ஒரு தேசத்து ராஜாவின் தூதர்கள் அல்லது அதிகாரிகள் இன்னுமோர் தேசத்திற்குப் போகின்றனர் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தச் சமயத்தில் அரசனிடமிருந்து நன்னடத்தைக் காகிதம் அல்லது முத்திரை மோதிரம் வாங்கிக் கொண்டு போவது வழக்கம்.

பேபரஸ் என்ற புல் இதழ்களின் மேல் இந்தச் சான்றிதழ்கள் எழுதப்படும். அதில் ராஜ முத்திரைகள் இடப்படும். அதை எடுத்துக் கொண்டு போகவேண்டும். அப்போதெல்லாம் வெளிநாடு போவதென்பது விதியின் விளையாட்டு. எப்போது போய்ச் சேருவார்கள். எப்போது வந்து சேருவார்கள். பத்திரமாக வந்து சேருவார்களா? ஒன்றும் தெரியாது. இப்போதெல்லாம் காலையில் போய் மாலையில் திரும்பிவருவார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ரோமாபுரி மன்னன் அகஸ்டஸ் சீசர் அவன் கொடுத்த பாஸ்போர்ட்டில் உள்ள வாசகம் என்ன தெரியுமா? ''இதைக்கொண்டு வரும் பயணிக்கு பூமியிலோ, கடலிலோ யாராவது துன்பம் செய்விக்க முடிவுசெய்தால், அப்படிச் செய்யுமுன் சீசரை எதிர்த்துப் போரிடும் அளவுக்குத் தனக்குப் பலம் இருக்கிறதா என்பதை யோசிப்பானாக'' என்பதாகும்.

அதற்குப் பின்பு 1780 இல் தான் முதன் முதலில் அமெரிக்கப் பாஸ்போர்ட் வழங்கப்பட்டதாம். 1980 ஜுலை 7ஆம் திகதியிடப்பட்ட அதில் காணப்படும் வாசகம என்ன தெரியுமா? "சட்ட சம்பந்தமான காரியங்களுக்காக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்ய விரும்பும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரஜை" என்று எழுதியிருக்கிறது. அப்போது அரசுச் செயலாளராக இருந்த தோமஸ் பிக்கரிங் அதில் கையெழுத்திட்டுள்ளார்.

ஆதிகாலத்து அமெரிக்கப் பாஸ்போர்ட்களில் அதை எடுத்துக் கொண்டுவரும் ஆசாமி பற்றிய வர்ணனைகளும் இருக்குமாம். 1914ஆம் ஆண்டில்தான் முதல் தடவையாகப் புகைப்படம் இணைக்கும் பழக் கம் உண்டானது. நல்ல பாஸ்போர்ட் ஆரம்பமான கதை தெரியுமா? கள்ளப் பாஸ்போர்ட் ஆரம்பமான கதை தெரியுமா? இரண்டாவது உலக மகாயுத்தம். அதற்குச் சில ஆண்டுகள் முன்பாகவே அது ஆரம்பித்து விட்டது. ஜேர்மனியில் ஹிட்லர் தோன்றினார். யூதர்களை விரட்டினார். ஜேர்மனியிலிருந்து மட்டு மல்ல ஐரோப்பாவிலிருந்தே விரட்டினார். அவர்களது பாஸ போர்ட்டுக்களைப் பறிமுதல் செய்தனர். சித்திர வதைக் கூடங்களுக்குக் கொண்டுசென்றார்கள். அவர்கள் தப்பித்தவுடன் ஐரோப்பாவில் நாடு நாடாக அலைந்தனர். அவர்கள் கையில் பாஸ்போர்ட் இருந் தால் பயமின்றி வாழலாம். இதனால் கள்ள பாஸ் போர்ட் வியாபாரம் ஆரம்பமானது.

இறந்துபோன அல்லது காணாமல் போன ஜேர்மன, அவுஸ்திரேலிய, பிரெஞ்சு படைவீரர்களின் பாஸ்போர்ட்களைத் திருடிக் கொண்டுவந்து கள்ளச் சந்தையில் அதிகவிலைக்கு விற்க ஆரம்பித்துவிட்டார்களாம். ஏராளமான அகதிகள் இறந்துபோன படைவீரர்களின் பெயர்களில் வாழ்ந்தார்களாம். அவர்களைப் போலவே முடிவெட்டிக் கொண்டனராம். படைவீரர்களைக் கடத்திக் கொண்டுபோய் கொன்று புதைத்துவிட்டு அவர்களுடைய பாஸ்போர்ட்டுக்களைக் கொண்டு வரும் கும்பலும் இருந்ததாம்.

இந்தக் காலத்திலும் பொய்யான பெயரில் சுற்றுப வர்கள் உலகம் முழுவதும் உள்ளனர். மாட்டிகொள் ளும் போதுதான் உண்மை வெளியில் வரும். ஒரு நாட்டி லிருந்து இன்னொரு நாட்டுக்குள் அடிவைப்பதற்குள் இவ்வளவு சிரமம் இருக்கிறது. நமது ஊருக்குள் ளேயே, ஒரு பஸ்ஸிற்குள்ளேயே அடிவைப்பதில் கூட எவ்வளவு சிரமம் இருக்கிறது தெரியுமா?

ஒரு டவுன் பஸ். உள்ளே ஏகப்பட்ட கூட்டம் அதற்குள நுழைவதற்கு நீண்டநேரமாக ஒருவர் முயற்சி செய்து கொண்டிருந்தார். உள்ளே நின்று கொண்டிருந்த ஒருவர் கத்தினார். ''ஏன் ஐயா இப்படி முண்டியடித்துக் கொண்டிருக்கிறாய்? அடுத்த பஸ்ஸில் வந்தால் நீ போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர முடியாதா?'' என்றார். '' நான் போய்ச் சேரமுடியும். ஆனால் நீ போய்ச் சேர முடியாது'' என்றார். '' என்ன சொல்கிறாய்?'' என்றார் அவர் எரிச்சலுடன். இவர் நிதானமாகச் சொன்னார் "நான் தான் இந்த பஸ் டிரைவர்" என்று.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அமெரிக்காவின் நிதியனைத்தும் தமிழருக்கே கிடைக்கின்றது

## சிங்கள ஊடகங்கள் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமெரிக்கா மூன்று பாரிய திட்டங்களுக்கு உதவுகின்றது. இதனால் அமெரிக்காவின் நிதியுதவி அனைத்தும் தமிழர்களுக்கே கிடைககின்றது என சிங்கள ஊடகங்கள் விஷமப் பரப்புரை நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றன.

யாழ்ப்பாணப் பகுதியில் போரினால் பாதிப் படைந்த பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளின் அடிப்படைத் தேவைகள் சிலவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில், முக்கிய உபகரணங்கள் சிலவற்றை வழங்க அமெரிக்க உதவி நிறுவனம் முன்வந்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாயில் உள்ள அகதிமுகாம், மூளாய் பொதுமருத்துவமனை, யாழ். பொதுமகப்பேற்று மருத்துவ சேவைப்பிரிவு போன்றவற்றினால் அவசியம் தேவைகளாகவுள்ள மருத்துவ உபகரணங்களை வழங்கவும், கழிப்பறை வசதிகளைச் சீர்செய்யவுமே யு.எஸ்.எயிட் எனப்படும் இந்த அமெரிக்க உதவி நிறுவனம் முன்வந்திருந்தது.

இருப்பினும், இதனைப் பெரிதுபடுத்திய சிங்கள ஊடகங்கள், யாழ்ப்பாணத்தில் அமெரிக்கா மூன்று பாரிய திட்டங்களுக்கு உதவுகின்றது எனவும், இதனால் அமெரிக்காவின் நிதியுதவி அனைத்தும் தமிழருக்குக் கிடைப்பது போலவும் பாரிய அளவில் பரப்புரையை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த காலங்களில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விவகாரங்களில் தடங்கல் ஏற்படும் போது தமிழர் தரப்பையே கண்டிப்பது போன்ற பாணியைக் கடைப்பிடித்த அமெரிக்கா, சுமார் ஒரு ஆண்டுக்கு மேலாகச் சற்று மாறுபாடாக இருதரப்பும் சமாதான நேர்ப் பாதையில் செல்ல வழிசமைக்க வேண்டும என்ற பாணியிலான அறிவிப்புக்களை வெளியிட்டு வருவதும் தேவையற்ற விதத்தில் அறிக்கைகளை வெளியிடாது தவிர்ப்பதுமே சிங்கள ஊடகங்கள் அமெரிக்கா மீது ஐயங்கொள்ளக் காரணமாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிடமிருந்து இலங்கைத் தரைப்படை, கடற்படை, வான்படைப் பிரிவுகளுக்கு பயிற்சிகளையும உபகரணங்களையும் பெற்ற போதும், போர்க்கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்து கொண்ட போது தாங்களாகவே ஏற்படுத்திய மாயவலையைத் தொடர்ந்து பேணவே அவை இவ்வாறு செய்து வருகின்றன.

இதன் காரணமாகவே தற்போது அமெரிக்க உதவி நிறுவனம் மிகச் சிறிய அளவில் உதவவுள்ள அடிப்படை மருத்துவ வசதிகள் குறித்த திட்டத்தை மிகப்பெரிய திட்டங்களாக கோலாகலப்படுத்தி சிங்கள மக்களைத் திசைதிருப்ப சிங்கள ஊடகங்கள் முண்டியடித்துக் கொண்டு செயற்படுகின்றன.

அந்த ஊடகங்களின் அப்பட்டமான இனவாதப் போககையும், தமிழர்களுடனும் அமெரிக்கா உறவாடிவிடுமோ என்ற பயத்தையும் இவ்வாறான செயற்பாடுகள் இனங்காட்டி நிற்கின்றன என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ற-க,121)

# வார்ப்புக் கைத்தொழிலை நவீனமயப்படுத்த வர்த்தகத் தொழில்துறை மன்றம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய முறைகளைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த வார்ப்புக் கைத்தொழிலை நவீனமயப்படுத்துவற்கு யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றம் முன்வந்துள்ளது.

இதன் முதற் கட்டமாக யாழ்ப்பாணத்தில் வார்ப்புக் கைத்தொழில் நிலையங்களில் இருந்து ஐந்து நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந் நிலையங்களில் தொழில்புரிபவர்களுக்கு நவீன வார்ப்புமுறையின் உத்திகள் தொடர்பான பயிற்சிகள் யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

இந் நவீன வார்ப்புப் பயிற்சியைப் பெறுவதற்கு அனோஜன் வார்ப்பு நிலையம் (நல்லூர்), பிறின்சன் வார்ப்பு நிலையம் (கோப்பாய்), சிங்கன் வார்ப்பு நிலையம்(யாழ்ப்பாணம்), விஜய் வார்ப்பு நிலையம் (சண்டிலிப்பாய்), சிவம் வார்ப்பு நிலையம்(திருநெல்வேலி) ஆகிய 5 நிலையங்களிலுமுள்ளோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் முன்னைய காலங்களில் வார்ப்பிரும்புத் தொழிற்சாலைகள் இருந்தன. இத் தொழிற்சாலைகள் அருகிச் சென்று பித்தளை,வெள்ளி, செப்பு என்பவற்றை வார்ப்புச் செய்யும் முறைகளே தற்போது காணப்படுகின்றன.

அவையும் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றி வார்ப்புத் தொழிலை செய்வதனால், பெருமளவு மூலப் பொருட்கள் விரயமாகின்றன.

அத்துடன், உற்பத்தித் திறனும் குறைந்து, செலவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதனால், யாழ்ப்பாணத்தில் வார்ப்புத் தொழிலை செய்பவர்களது தொகை மிகவும் அருகிக் கொண்டே செல்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டே வார்ப்புக் கைத்தொழிலில் நவீனமுறைகளைப் புகட்டுவதற்கு யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றம் முன்வந்துள்ளது.

இவ்வாறு நவீன முறைகளைப பின்பற்றுவதன் மூலம் உற்பத்தித் திறனைக் கூட்டுவதோடு, தரமான பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியும். அத்துடன், மூலப் பொருட்கள் விரயமாவதையும் இதன்மூலம் தடுக்கலாம் என யாழ்ப்பாண வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் தொழில்நுட்ப இணைப்பாளர் எஸ்.டபிள்யூ. பி. விஜயகோன் தெரிவித்தார். (ற-19)

## இராசி பலன்

29.08.2004 *(ஆவணி 13, ஞாயிற்றுக்கிழமை)*

சதுர்த்தசி முற்பகல் 10.41 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.23 மணிவரை
இராகுகாலம் 4.35 - 6.05 மணிவரை
சுபநேரம் 9.05 - 10.35 மணிவரை
பூரணை விரதம், 2ஆம் ஆவணி ஞாயிறு

**மேடம்**
தெய்வ தரிசனம், தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம்.

**இடபம்**
சுபநிகழ்ச்சி, நல்ல செய்தி, முயற்சி கைகூடும், கடின உழைப்பு.

**மிதுனம்**
ஆன்றோர் மதிப்பு, புதியதிட்டமிடல், அச்சமான நிலை, வயிற்றுவலி.

**கடகம்**
உடல்நலக்குறைவு, வண் அச்சம், காரிய தடங்கல், பணக்குறைவு.

**சிங்கம்**
திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய், கௌரவமான நிலை.

**கன்னி**
சுகவாழ்வு, பகைவர் நேசம், தடைப்பட்ட காரியம் கைகூடும், போசனநன்மை.

**துலாம்**
காரிய இடையூறு, மனக்கவலை, வியாபாரச் சிந்தை, பணத்தட்டுப்பாடு.

**விருச்சிகம்**
அற்பர் நேசம், தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம், மாதாசுகம்.

**தனுசு**
கூட்டுமுயற்சி, இனிய அனுபவம், பணவருவாய், உறவினர் சந்திப்பு.

**மகரம்**
மதிப்புக்குறைவு, பொருள் விரயம், குடும்பக்கவலை, முயற்சிதாமதம்.

**கும்பம்**
தெய்வதரிசனம், பெரியோர் சந்திப்பு, நல்லமுயற்சி, செல்வாக்கு.

**மீனம்**
பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுத்தல், பிரயாணம், காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

# கொலைகளின் பின்னணியில் சிறை சென்று மீண்டவர்கள்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களில், சில குற்றங்களுக்காக சிறைசென்று விடுதலையானவர்களே தொடர்புபட்டிருப்பதாக தமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நடைபெறும் கொலைகளுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பில் ஏற்பட்ட உட்பூசல்கள் மற்றும் பாதாள உலகக் கோஷ்டியினருக்குமிடையில் இடமபெறும் அதிகாரப் பிரச்சினைகள் போன்றவையே காரணமாக உள்ளன.

இத்தகைய சம்பவஙகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாக்கும நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் எனறும அவர் மேலும் தெரிவிக்கார். (ற-க.8)



# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

## விருச்சிகம்



**24.03.2005 முதல் 07.05.2005 வரை**

கணவன்,மனைவி உறவு கண்ணியமாக இயங்கிவரும். குழந்தையின் ஆரோக்கியம் பாதித்துமறையும். வெளியூர் பிரயாணம் குறித்தபடி ஏற்கமுடியாது. கருவுற்றிருப்பவர்கள் குழந்தை பிறக்கும் வரை மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். உங்கள் கௌரவத்தையும் பாதிக்கச் செய்யலாம். கடன் பட்டவர்கள் வகையில் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். உடனிருப்பவர்கள் மூலம் உங்கள் வேலைகளை மட்டும் துரிதப்படுத்த வேண்டும். அரசாங்க வகையில் சில புதிய நன்மை நண்பா பணப்பஞ்சம் இல்லை. தேவைகள் உட னுக்குடன் பூர்த்தியாகிக் கொண்டே வரும். கௌரவக்காரகன் சுக் கிரன் தனக்கு ஆகாத இல்லத்தில் நிற்ப தால் மறைந் திருந்த பழய விசயங்கள் சில வெளியாகும். கணவன்,மனைவி உறவு ஒருவழியில் திருப்தியான்து தான். பெண்களுக்கு கற்பக்கோளாறு, கருச்சிதைவு போன்ற தீமைகள் செய்யத்தக்கவன் எனவே குருசாரம் மாற்றம வரை கவனம் தேவை. செய்தொழில வழியைச் செப்பனிடுவதில் தான் உங்கள் கவனம் இருக்கவேண்டும். போட்டு வைத்த திட்டங்கள் நிறைவேற வேகமா கச் செயல் படுவீர்கள். வெற்றி உங்கள் பக்கம் நிற்கிறது. புது நட்பு மகிழ்ச்சிக்குரிய சில வேறுவிசயங்களும் இடம் பெறும்.

**அதிர்ஷ்ட எண்கள்:1, 3, 5.**

**அனுகூலத் திக்கு:வடக்கு.**

**07.05.2005 முதல் 20.06.2005 வரை**

மறைந்திருந்த விசயங்கள் சில இப்போது வெளியாகும். சத்துருக்களுக்கு தானபலம் உள்ள காலம் என்பதால் வழக்கு வகையில் நிதானமாகப் போவது சிறப்பு.கூட்டாளிகள் கணக்கு வகையில சரிகட்டிகொள்ள வேண்டும். சுபவிசயம குறித்த பிரயாணப் பேச்சுத்தொடரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தன் கடமையைச் செய்வதில் கவனமுடன் கடமைச் செய்தல் முக்கியம். உங்களைக் குறைகூற மற்றவர் காத்திருப்பது உங்களுக்குத் தெரியாது. எனவே மறை முகமாக சத்துருக்கள் உண்டு என்பதை கவனிக்கவும். போட்டி, பந்தயம், விளையாட்டு இந்த வழிவெளிச்சமாகவே இருக்கிறது. வெளிச்சமாக இருக்கிறது என்றால் உங்களை சூதாடத்தூண்டுவதல்ல. சிறு ஆதாயம் இருக்கும். நட்டம் இல்லை கின்றன. என்றாலும் உடனிருப்பவரை இதமாகச் சரிகட்டிப் போக வேண்டும். தூரத்துக் கடிதம் முக்கிய பிரச்சினைகள் உருவாக்கி விட்டுவிடும்.

**அதிர்ஷ்ட எண்கள்:3, 4, 6.**

**அனுகூலத் திக்குகள்:மேற்கு, தெற்கு.**

**20.06.2005 முதல் 03.08.2005 வரை**

நண்பர்கள் இல்லமதில் குடும்பத்துடண் விருந்துண்பதும் நேரிடும். முன்பு தடைப்பட்ட பிரயாணத்தை மீண்டும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.புது உடைகள், செம்பொன் ஆபரண சேர்க்கையும் இந்த இராசிப் பெண்களுக்கு உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற ஈபாடுகளும் கவர்ச்சி கரமாண ஆதாயத்தைக் கொடுக்கவல்லது. அரசாங்கத்தில் இருந்து சிலர் எழுத்து மூலம் நன்மை பெறுவர்.கடனும் வழக்கும் வெகுதூரத்தில் நிற்கின்றன. காணாமல் போன பொருட்களும் இப்போது கையில் வந்து சேரும்.உத்தியோகப் பிரிவு மனிதர்களுக்கு பதவி உயர்வு பாராட்டுக்கள், விருந்துகொள்வது போன்ற நன்மைகள் இருக்கின்றன. மேல்நிலை ஊழியர்கள் முதல் கீழ் நிலை ஊழியர்களுக்கும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். மேலும் செலவுகளும் புதிய உறவு சேர்வதும் குறிப்பாக நன்மைகளாகும். தொழில் மந்தம் என்பது இல்லை. வேலையாட்கள் நட்டப் போக்கில் இயக்கம் கொள்வதால் தன நிலை உயர்வைப் பெறுவீர். இப்போது தைரிய உயர்வும் இருக்கும்.கடன் சம்பந்தமான பிரச்சினைகள் முன்பிருந்தது. இப்போது கட்டுக் கடங்கி வந்துவிட்டன. பெருமை பேச்சுக்கள் அதிகமாக இருக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியானதே.

**அனுகூலத் திக்குகள்: தென்கிழக்கு, கிழக்கு.**

**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

ஆரோக்கியத்தில் கவலையில்லை. அரசியல்வாதிகளுக்கு மிதமான போக்கு இருப்பதுடன்.கௌரவச் செலவுகளும் கடுமையாக இருக்கும். எழுத்து மூலம் எதிர்பார்க்கும் அரசாங்க உத்தரவு தொழில் வகைக்குத் திருப்தியாக வரவில்லை. இந்தவகை சற்றுக்கால தாமதமாகும்.உங்கள் கணக்குகளை கவனமாகப் பார்க்கவேண்டும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு பாகஸ்தர்கள் இடையில் பிணக்கு உண்டாக வாய்ப்பிருக்கிறது.வழக்குவேகமில்லை.வாய்ப்பேச்சில் நிகழக்கூடியதுதான்.இந்தச் சூழ்நிலை உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு மாத ஆரம்பத்தில் உயர்வானபோக்கு உடனிருப்பவர்களால் உபகாரங்களும் தொடர்ந்து இருக்கும்.உடனிருந்தவர்கள் பிரிவும் கூட அவசியமாகத்தான் இருக்கும். பிரயாணம் மேற்கொண்டது திருப்தியில்லாதது. கடமைகளைச் செய்யத் தடைகள் இருக்கின்றன. கவனமறதி,மனதை ஒரு நிலைப்படுத்த முடியாமை என்பது அதிகமாக இருக்கின்றது. இதனால் உரியகாலத்தில உரியதைச் செய்யமுடியாது. எழுத்து ஒப்பந்தம் போன்றவைகளும், ஒப்பந்தத் தொழில் உள்ளவர்களுக்கு சிக்கலாகவே இருக்கும். கணவன், மனைவி உறவுக்குக் கைகொடுக்கும காலம்.உங்கள் செயலுக்கு உடனிருப்பவர்கள் அல்லாமல் மற்றவரும் பாராட்டும் காலம். குடும்பத்தில் பெரியவர்கள் பாராட்டு உண்டாகும். பெண்கள் வயிற்று வலி,சீதள பாதிப்பு போன்ற பிணிகளால் பாதித்துக் குணமடைவர். குடும்பத்தேவைகள் பூர்த்தி யானது.

கள் எதிர்பார்க்கலாம். தன இல்லத்து சூரியன் தைரியத்தை உயர்த்தி இருக்கிறான் என்பதை நீங்களே உணர முடியும். இதன் காரணமாக உங்கள் அரசியல் நண்பரையும் சந்திக்க வேண்டியிருக்கிறது.புத்திரர்,புத்திரியர்கள் வகைக் கல்வி உயர்வுக்கு குரு தன் வேலைகளைச் செய்வான் என்பது உறுதி. மேலும் இப்போது உங்கள் தொழில் வழிப் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல முடிவைக்காணலாம். உங்கள் பழய விசயங்களில் முன்னின்று முடிக்கத் தக்கவன் வரும் ஆட்சி சூரியன். சுக்கிரன் தனம் வகையில் தன் நிறைவை செயயக்கூடியவனே. இதைத் தொடர்ந்து புதுத் திட்டங்கள் உருவாவது, புதுத்தொழில் ஆரம்பிப்பது, கூட்டுமுயற்சி போன்றவைக்கு ஊக்கத்தையளிக்கும்.தேக ஆரோக்கியத்தையும் இப்போது கவனிப்பது அவசியம். உஷ்ணத் தால் பாதித்து பின் குணமாகும். குடும்பத்தில் கணவன்,மனைவி உறவு திருப்தியானதே. வெளிவட்டார செல் வாக்கையும் பெருக்கிக் கொள்ளும் மாதம். புது நட்பு புகழ்ச் சிக்குரியது. இந்த இராசி உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு புது இடத்திற்கு மாற்றம் உண்டாகும். அலுவலகப் போக்கு அமைதியானதே. கலைத்துறை நண்பர்கள் திட்டங்கள் பெரியதாக வைத்திருப்பர்.அதற்குத் தக்கதருணம் இன்னும்வரவில்லை. மாணவ, மாணவியருக்கு பிரயாணம் பெருமையளிக்கும்.வெளியூர் அல்லது வெளி நாட்டுப் பிரயாண ஆதயாம் உண்டாக்கும். இரும்பு, இயந்திரம், வாகனத் தொழில் உள்ளவர்களுக்கு தனவாரு வாய் திருப்தியாகவே இருக்கின்றன. மனோ தைரியம் அதிகரிக்கும் மாதமிது. உங்கள் மனதில் மறைந்தி ருந்த செயல்கள் சில இப்போது வெளியாகும். பெரிய மனிதர்கள், உறவின் முக்கியஸ்தர்கள் சந்திப்பு நல்ல சூழ்நிலையை உருவாக்கும். கணவன்,மனைவி உறவில் கவர்ச்சி நிறைந்திருக்கின்றன. காது, பல்நோய தோன்றி நீங்கும். பழய என்பதுதான் பொருள். பொது வாகப் பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது என்பதை ஆரம்பத்திலேயே கொடுத்திருககிறேன். குடும்பவகையில் அவசர அவசியத் தேவைகள் செலவுகள் இருப்பதை நீங்கள் உணரவேண்டும் ஒன்றுக்கு குறிப்பிட்டு வைத்திருக்கும் பணம் வேறு ஒன்றுக்கு செல வழிக்க வேண்டிவரும். குடும்பத்தில் வயதானவர்கள் வழியில் மருத்துவச் செலவுகளும் இடம்பெறும். வாகனம் வைத்திருப்பவர்களுக்கு அவ்வழி பழுது பார்க்கும் செலவும் உங்கள் கையைக் கடிக்கும். கடன்வழக்குகள் தொடர்ந்திருப்பின் அவை முடிந்து விடுவதுபோல இருந்து தொடர்ந்து வரும். தூரதேச பிரயாணம் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும்.ஆனால் முயற்சியோடு நிற் கும் பயணம் ஏற்க முடியாது. கடன் வழக்கு வகையிலும் கண்ணியத்தைக் காப்பாற்றி விடுவான். புதிய வழக்கு வகையிலும் பாதிப்பு ஏதும் ஏற்படாமல் அவை வெற்றி நிச்சயமாகும். வெளிவட்டார மனிதர்களும் உங்கள் செயலுக்கு, வார்த தைகளுக்கு உடந்தையாக இருப்பர். உங்கள் போக்கில் குறை கண்டவர்களுக்கு நல்ல வார்த்தைகள் கூறுவது சிறப்பானதே. (தற்காலம் நடப்பது சனி திசையே இருக்குமானால் நேர் மாறாக தீய பலன்களே நடக்கும் என்பதைக கருத்தில் கொள்ளவும்.) சிலர் புதியதாக வீடு கட்டுதல், மனைவாங்குவது குறிப்பிடத் தககது. விவசாயிகளாக இருப்பின் கருமை நிறமான பூமி வாங்குவதும் குறிப்பிடத்தக்கது. சத்துருக்களுக்குத்தான் பலமுள்ள காலம் என்பதால் வழக்கு வகையில் நிதானமாகப் போவது சிறப்பு. கணக்குவகைப் பிரயாணம் பேச்சுத் தொடரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தன்கடமையைச் செய்வதில் கவனமுடன் இருத்தல் முக்கியம்.பொதுவாக பல சில பிரச்சினைகள் எதிர்நோக்க வேண டியிருக்கும்.சுக்கிரன் கடைக்கால் எல்லை இது. இப்போது வந்திருப்பது புதிய இடம் தான். சில வகையிலும் மனத்திருப்தி இல்லாமல் இருக் தனித்து இயங்குவதைவிட கூட்டு முயற்சி கணிசமான நன்மை தரும் என நம்பலாம்.

குடும்ப வகையில் சொத்துப் பிரச்சினைகளும் சிலருக்கு குறிப்பாக மனைவி இல்லத்து மனவேற்றுமையும் உண்டாகும். உத்தியோப் பிரிவினர்கள் பதவி உயர்வை எதிர்பார்க்க முடியாது.பழய பிரச்சினைகள் புதிய சிக்கலை உருவாக்கும்.எழுத்து உத்தரவு உங்களுக்கு எதிராகவும் அமையும். சில மாதம் ஓய்வு கொள்வதும் அவசியமாக இருப்பது உங்களை வெற்றியுடையவர்களாக ஆக்கும். வாகன வகையில் இருந்த சிக்கல் தீர்க்கப்பட்ட விடும். வழக்கு மூலம் தாமதப்பட்ட காரியங்க ளும் வெகு வேகமாக செயலமுறைக்கு கொண்டு வந்து விடலாம்.அரசாங்க மனிதர்களை உங்கள் செயலுக்கு உறு துணை யாக்கலாம். காலம்கடந்து விட்டது என விட்டவைகள் இபபோது புதிப் பிக்கப்படும். பழய பொருள் வகையிலும் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் இருந்தது. புது வழக்கு நீதிமன்றச் செலவை சிலருக்குக் கொடுக்கவே செய்வான். தேக ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக் கொள்ளவும். போட்டி, பந்தயம், விளையாட்டு வகை ஈடுபாடுள்ளவர்களுக்கு ஆதாயமும் வெற்றியும் உண்டு. கணவன்,மனைவி உறவில் நல்ல போக்கே நீடிக்கும்.குழந்தைகள் முன்னேற்றம் குறித்தபடி இருக்கின்றன. கொடுக்கல், வாங்கல் திருப்தியாக இருக்கிறது. குடும்பம் உறவினர் வழியைவிட வெளி வட்டாரம் சிறப்பு மிக்கது.சில சமயம் சுகம் அனுபவிப்பதும் வெளியில் இருக்கும். நீங்கள் இப்போது புது நண்பரைச் சந்திப்பீர்கள்.அவர்களால் உபகாரம் இருக்கின்றன. இதில் அரசாங்க உயர் மட்ட மனிதர்கள் தொழில் வழக்கு எழுத்து மூலம் ஆதாயம் இருக்கின்றன. கணவன்,மனைவி வகைக்கு பூமி வாங்கு வது அல்லது ஒப்பந்தம் செய்வதும் உண்டாகும்.

**அதிர்ஷ்ட எண்கள்:7, 4, 2.**

விருந்துக்குச் செல்வது ,வெடிக்கையனுபவிப்பது மகிழ்ச்சிகரமானது. பணவரவு குடும்பத்தில் சுபசெலவுக்கு வழி செய்யும். செய்தொழில் வகையில் மேல்மனிதர்களைச் சந்திப்பதால் பணம் கொடுக்கல் சம்பந்தமான பிரச்சினைக்கு நல்ல தீர்வைக்காணலாம். வியாபாரிகளுக்கும்,இதர மோட்டார் இயந்திரத் தொழில் செய்பவர்களுக்கும் இதுஒரு வாய்ப்பான காலம் ஆகும். தனசேயர்க்கை திருபதியான தொழில் முன்னேற்றத்தை உருவாக்கிவிடும். பெண்கள் வகைக்கும் ஆடை,அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாக்கும். கடன் வழக்குவகையும் ஆடை, அணிகலன் வகையும் உண்டாகும். எதிர் பார்த்த பிரயாணம் மகிழ்ச்சியைக் கொடுக்கும். எதிர்பாராத உறவினரையும் சந்திக்க வைக்கும். அரசியல், அரசாங்க மனிதர்கள் தொடர்பால் எழுத்து வகை நன்மையும் உண்டு.உத்தியோகப் பிரிவு ஆண்,பெண்களுக்கு பதவியில் மாற்றம் ,பிறரால் பாராட்டு போன்றவையும் உண்டாகும்.சிலருக்கு திடீரென திருமணம் கூடிவருவதும் இருக்கும். அரசாங்க மனிதர்களின் ஆதரவான செயல், உங்கள் பழய சிக்கலைப் போக்க உதவியாக இருக்கும். சுபகாரியங்கள் முன்பு குறித்தது இப்போது இடம்பெறும் வாய்ப்பை பெற்று விட்டது. விட்டுப் போன உறவு தொடரும் காலம். வேண்டாத நண்பரும் விருந்தில் கலந்துகொளவர். உங்க ளுக்கு வேண்டியவராக நடந்து கொள்வர்.மேலும் குடும்பத்தில் சில மாற்றங்கள செய்வது மனத்திருப்தியைக் கொடுக்கும். தொழில் வழியில் விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் தொடரும். தொழில் வழி ஜீவன நிலையில் செய்யும் மாற்றங்கள் நல்லதற்கே என்பதை ராகு செய்வான். சிலர் நீச தொழிலை பின்பற்றவும் கூடும்.

**அதிர்ஷ்ட எண்கள்:4, 6, 8.**

**அனுகூலத் திக்கு:மேற்கு.**

(தொடரும்)

# அல்-கெய்டா தீவிரவாதிகளை ஒடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.நாவிடம் நிபுணர்கள் கோரிக்கை

(இலண்டன்)

சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனின் அல்-கெய்டா தீவிரவாத அமைப்பை ஒடுக்கும் ஐ.நா.நடவடிக்கைகள் ஓரளவே பலன் தந்துள்ளன.அல்-கெய்டாவை நசுக்க ஐ.நா. இன்னும் தீவிரம் காட்டவேண்டும் என்று நிபுணர்ககள் எச்சரித்துள்ளனர்.

சர்வதேச தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடத்திய ஐ.நா. அமைப்பைச் சாராத நிபுணர்கள் தங்களது அறிக்கையை ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில்,

ஆயுதங்கள் விற்பனையைத் தடுத்துவிட்டதாக இதுவரை எந்தநாடும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை.அல்-கெய்டாத் தீவிரவாதிகளுடன் தொடர்புடைய ஒருவருக்கோ அல்லது குழுவினருக்கோ ஆயுதங்கள் செல்வதைத் தடுத்து விட்டோம் என்றும் எந்த நாடும் உறுதிப்படுத்தவில்லை.

'தங்கள் நாட்டு எல்லையில் அல்-கெய்டாத் தீவிரவாதிகளின் நடமாட்டம் உள்ளது' என 19நாடுகள் மட்டுமே சந்தேகம் எழுப்பி உள்ளன.ஆனால் உலகின் பல நாடுகளில் அல்-கெய்டாத் தீவிரவாதிகள் பெரிய அளவில் செயல்பட்டு வருகின்றனர்.அல்-கெய்டா அமைப்புடன் தொடர்பு வைத்துள்ள நபர்களின் அல்லது அமைப்புக்களின் வங்கிக் கணக்குகளை முடக்கி வைத்துள்ளதாக 34நாடுகள் கூறியுள்ளன.

'சொத்துக்கள் முடக்கம்' என்று அந்தநாடுகள் கூறுவதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. சொத்துக்கள் என்றால்... அவை என்னென்ன,அவற்றின் மதிப்பு எவ்வளவு,யாருடைய பொறுப்பில் அல்லது பெயரில் அந்தச் சொத்துக்கள் உள்ளன போன்ற தகவல்கள் எல்லாம் மறைக்கப் படுகின்றன.

சர்வதேச அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் தீவிரவாத அமைப்புகளுக்கு நிதி செல்வது ஓரளவு தடுக்கப்பட்டுள்ளது. நிதிசெல்வதை முழுவதுமாகத் தடுத்து விட்டால், தீவிர வாதிகளைப் பலவீனப்படுத்திவிடலாம்.

எனினும் இரசாயன ஆயுதங்கள் உட்பட பல அதிபயங்கர ஆயுதங்களைப் பெற அல்-கெய்டாத் தீவிரவாதிகள் முற்படுவதாகத் தகவல்கள் வருகின்றன.இது போன்ற அச்சுறுத்தல்களை ஒடுக்க மேலும் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் எனக குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-யே)



நாளை நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள குடியரசு தின தேசிய மாநாடு தொடர்பாக பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ் பிரிவினர் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.


# மார்க்ரெட் தட்சரின் மகன் தென்னாபிரிக்காவில் கைது

(ஜோகனஸ்பர்க்)

தென்னனாபிரிக்காவில் உள்ள கென்யா நாட்டில் புரட்சி செய்வதற்கு சதி செய்ததாக முன்னாள் இங்கிலாந்து பீரதமர் மார்க்ரெட் தட்சரின் மகன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் உள்ள நாடுகளில் கென்யாவும் ஒன்று. இதன் தலை நகரமான கேப் டவுனில் முன்னாள் இங்கிலாந்து பிரதமர் மார்க்ரெட் தட்சரின் மகன் மார்க் தட்சர் வசித்து வருகிறார். இவர் கேப்டவுன் நகரில் சமீபத்தில் நடந்த புரட்சியில், புர்ட்சிக்காரர்களுக்கு நிதி திரட்டி தந்ததாகவும், அதற்கு தர்க்க அல்லது சட்டரீதியாக உதவி புரிந்தாகக் குற்றம் சாட்டப்பட்டு, ''ஸ்கார்ப்பியன்ஸ்'' என்ற பொலிஸ் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

மேலும வெளிநாட்டு இராணுவ உதவி ஒழுங்குமுறை சட்டத்தை மீறியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு, 'ஸ்கார்ப் பியன்ஸ்' பொலிஸார் விசாரணை நடத்தினர். கேப்டவுனில் உள்ள மார்க் தாட்சரின் வீட்டில் சோதனை நடத்திய இந்த 'ஸ்கார்ப்பியன் பொலிஸார் அவரை அங்கேயே கைது செய்ததாக மக்கோசினி நோஷி என்கிற அப்படைப் பிரிவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ந-யே)



ஈராக்கில் பாஸ்ரா நகருக்கருகே எண்ணெய் குழாய்கள் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடாத்தியதில் தீ பற்றியது. இதனால் அந்தப் பகுதியே புகை மண்டலமாகக் காட்சியளிக்கிறது.

## WORLD NEWS உலக தரிசனம்

# இத்தாலியப் பத்திரிகையாளர் படுகொலை; அந்நாட்டுப் பிரதமர் கடும் கண்டனம்

(பக்தாத்)

ஈராக்கில் பணியாற்றிய இத்தாலிய பத்திரிகையாளர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார். இத்தாலிய நாட்டுப் பததிரிகையான டைரியோவின் பகுதிநேர நிருபராகப் பணியாற்றியவர் என்சோபல்தோனி. நஜாப் நகரில் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பல்தோனியை கடந்த ஒருவாரமாக காணவில்லை.



இதற்கிடையில் பல்தோனியைத் தாங்கள் கடத்திச் சென்று கொன்று விட்டதாக தீவிரவாதிகள் அல்-ஜசீரா தொலைக் காட்சிக்கு அனுப்பியுள்ள வீடியோ கசட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

பல்தோனி கொலை செய்யபபட்ட காட்சியும் அந்த வீடியோவில் இருந்தாகவும், ஆனால் அவற்றை ஒளிபரப்ப முடியாது எனத் தெரிவித்து விட்டதாகவும் அல்-ஜசீரா அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பல்தோனி கொல்லப்பட்டதற்கு இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். தீவிரவாதிகளின் இந்தச் செயல் காட்டு மிராண்டிததனமானது. பல்தோனி கொல்லப்பட்டதால், இத்தாலியப் படைகள் ஈராக்கை விட்டுவெளி யேறிவிடாது. ஈராக் அரசுக்கு கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றத் தொடர்ந்தும் அமைதிப் பணியில் ஈடுபடுவோம் என பெர்லுஸ்கோனி தெரிவித்துள்ளார். (ந-யே)

# இஸ்ரேலிய உளவாளி பென்டகனுக்குள் ஊடுருவல்

(வாஷிங்டன்)

இஸ்ரேலிய உளவுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனுக்குள் ஊடுருவி இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்காவின் உளவுப் பிரிவான எவ்.வி.ஐ. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள போதிலும், இஸ்ரேலியத் தூதுவராலயம் இதனை மறுத்துள்ளது.

இஸ்ரேல்,ஈரான்,ஈராக் ஆகிய நாடுகளில் காணப்படும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் செல்வாக்கைப் பயன்படுத்தி இவர் பென்டகனுக்குள் நுழைந்திருக்கலாம் என அமெரிக்க உளவுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விரிவான விசாரணைகள் இஸ்ரேலிலும், அமெரிக்காவிலும் தொடர்வதாக அமெரிக்க முகவர் செய்தி ஸ்தாபனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ந-யே)

# தனது கணிப்பு தவறு ஒப்புக்கொள்கிறார் புஷ்

(நியூயோர்க்)

ஈராக் போரின் பின் விளைவுகளைப் பற்றிய தனது கணிப்புத் தவறாகி விட்டது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் முதன்முறையாக ஒப்புக் கொண்டுள்ளார்.

'தி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு அவர் அளித்த போட்டியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் போருக்குப் பிறகு என்ன சூழ்நிலை ஏற்படும் என்ற எனது கணிப்புத் தவறாகி விட்டது.ஆனால்,சதாம் உசேனின் இராணுவத்தை முறியடித்து கிடைத்த திடீர் வெற்றியால் அமெரிக்க இராணுவம் அங்கு 17 மாதங்களாகத் தாக்குப் பிடிக்கிறது.

ஈராக் போரில் இதுவரை அமெரிக்க வீரர்கள் 969 பேர் பலியாகி இருக்கின்றனர்.இதில் கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரலுக்கு பிறகு பலியானவர்கள் 828 பேர். ஆறாயிரத்து 690பேர் காயமடைந்துள்ளனர்.

வடகொரியா,ஈராக் நாடுகளின் அணுவாயுதத் திட்டங்கள் குறித்து இப்போது குறிப்பிட எதுவுமில்லை.அவர்கள் அத்திட்டங்களை கைவிடத் தொடர்ந்து தூதரக ாதியாக முயற்சிகள் மேற்கொளளப்படும் எனவும் அதிபர் புஷ் மேலும் தெரிவித்துள்ளார். (ந-யே)

# இந்தியக் கருவிகளின் இசைக்கு குதூகலிக்கின்றனர் அமெரிக்கர்


(நியூயோர்க்)

இந்திய இசைக்கும், இந்தியக் கருவிகள் எழுப்பும் இசைக்கும் அமெரிக்காவில் அதிகமவுசு ஏற்பட்டுள்ளது. இளம் அமெரிக்கர்களுக்கு இப்போது இந்திய இசைமீது மோகம் அதிகரித்து வருகின்றது. அவர்களுடைய ஜாஸ் இசையில் பஞ்சாப இசையான பாங்க்ராவைக் கலந்து பாடல் இயற்றியதில் அமெரிக்காவில் அப்பாடல் சூப்பர் ஹிட் ஆகிவிட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த மிஸ்சி எலியட் என்பவரின் பாடலில் பஞ்சாபி ஒருவர் தனது பாரம்பரிய பாங்க்ரா முறையில் இசையமைத்து கசட் வெளியிட்டார். பாடல் சூப்பர் ஹிட் ஆகிவிட்டது. மூவ் யுவர் பாடி என்ற பாடலுக்கு பாங்க்ரா முறையிலான வேக அதிர்வுகளுடனான இசையை அமைக்கவே, தற்போது அமெரிக்காவின் மூலை முடுக்கெல்லாம் இந்தப் பாடல் ஒலிக்கத் தொடங்கி விட்டது. ரேகா என்ற பஞ்சாபியே இதற்கு முழு முதற் காரணம். பாங்க்ரா இசையில் தபேலா வாத்தியக் கருவியின் வேக அதிர்வு களைக் கொண்டு இயற்றப்பட்ட இந்தப் பாடலை அடிப்படையாக வைத்து நிறைய பாடல் கசட்டுகள் வெளிவர உள்ளன.

இவற்றுக்கு பாலிவூட் டிஸ்கோர்ஸ் என்றும் பெயரிடப்பட்டுள்ளன. இதில் என்ன அப்படி ஈர்ப்பு? நடனம் ஆட வசதியாக இருப்பதால் இந்த அதிரடி வரவேற்பு என்கின்றனர் அமெரிக்க மக்கள்.

இதை விட ஒரு சந்தோஷமான விஷயம் என்ன தெரியுமா? அமெரிக்க மக்கள் தினமும் உடற்பயிற்சி செய்வதில் ஆர்வம் காட்டுபவர்க்ள். இப்போது உடற்பயிற்சியின் ஒரு வகையான இசையுடன் சேர்ந்த உடற்பயிற்சி (ஏரோபக்ஸ்) க்கு பாங்க்ரா இசையைப் பயன்படுத்துகின்றனா. அமெரிக்காவில் தூள் கிளப்புது இந்திய இசை. (ந-யே)



முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சௌத்திரி ஷிஜாத் தமது பதவியை இராஜினாமாச் செய்யமுன் பாராளுமன்றத்தில் தனது இறுதியுரையை நிகழ்த்துகின்றார்.

# நன்றியுணர்வு மிக்க இறை வேண்டல் நிறைவு மிகு அமைதியைத் தரவல்லது

ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலாகவே இவ்வுலகில் படைக்கப பட்டுள்ளான். அழியாத ஆன்மாவின



சாயலே மனித சாயலாகும் .எனவே ஒவ்வொரு மனிதரிலும் கடவுளின் சாயலைக் காணத்தவறி விடுகின றோம் ஒவ்வொருவரையும் நாம் மதிப் பிடு வது பணத்தை, படிப்பை அந் தஸ்தை வைத்தே இதன்அடிபப டையிலேயே அவர்களோடு உறவாடுகின் றோம். ஏழை எளியவர்களைப் புறக் கணிககின்றோம்.

ஆனால் இயேசுக்கிறிஸ்து கூறுகின்ற அறிவுரையும்,காட்டும் வழியும் எம்வழி முறைகளுக்கு முற்றும் முரணபாடானதாக அமைந துள்ளதைப் பின்வருமாறு குறிப் பிடுகின்றார்.''நர் விருந்தளிக்கும் போது ஏழைகளையும், உடலல ஊன முற்றோரையும் ,கால் ஊனமுற் றோரையும் பார்வையற்றோரையும் அழையும் அப்போது நீ பேறு பெற்ற வர் ஆவீர் . ஏனெனில் உமக்கு கைமாறு செய்ய அவாகளிடம் ஒன் று மில்லை" (லூக் 14:13,14) வணணக செல்வத்தை நாம அடைநது கொள்ள வேண்டுமென்றால் இயேசுவின் வார்த்தைப்படி வாழ்ந்தாலே அந்தப் பேறு கிடைக்கும் இல்லையென்றால் வெறும பூச்சியமே.

## பரமபிதா காட்டியபாதை

### ஆண்டவரில் மகிழுங்கள

எமது இவ்வுலக வாழ்வு மகிழச்சி நிறைநததாக அமைந்து விட வேணடும் என்றே, ஒவ்வொரு மனிதனும் எதை யெதையோ எல்லாம் சேர்க்க வேண்டு மென்று ஓடி அலைகின்றான். ஆனால் நன்றியீனத்தினாலே அந்த மகிழ்ச்சியை அவனால் ஜீரனிக்க முடியாமல் போகின்றது. தனது மகிழ்ச்சியை ஆண்டவருடன் இணைத் துக்கொள் ளாததினாலே வெறுமனே அந்த மகிழ்ச்சி சொறப வேளையிலே மீண்டுமதுன்பமாக மாறி விடு கின்றது.

எல்லோரையும் மதிக்கின்ற மனநிலை எமது பெருமையினாலே எம்மிட மிருந்து அகன்று வடுகின்றது. எனவே மகிழ்வைச் சந்தோசத்தை அடிக்கடி தேடி அலைந்து கொண்டே இருக்கின்றோம். காரணம் இறைவார்த் தைகளை, இறை மொழிகளை, இறை ஏவுதல்களை, இறை வழிகாட் டல்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து, எம்மனத்தின் செயற்பாடுகளுக்கு செயலுருவம் கொடுப்பதின் விளைவே எமக்கு அமைதியற்ற நிலையை அடிக்கடி ஏற்படுத்தி விடு கின்றது. "உங்கள பெயர் விண்ண கததில் எழுதப்பட்டிருப்பது பற்றியே மகிழுங்கள ."

### நன்றியுடையவராய் இருங்கள்

எம்மை நாம் பெருமைப்படுத்தும போது ,எம்மிலே அதீத நம்பிக்கை கொள்ளும் போது எமது செயற் பாடுகளை பல வேளைகளில்பிழைத்து விடுகின்றன. இறை சாயலாகப் படைக்கப்பட்ட நாம் அடிக்கடி இறை துணையுடன் அவரின் இணைவு பெற்றவர்களாக வாழ வேண்டும் என்பதை புனித பவுலடியார் குறிப் பிடுகின்றார்.

"ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாய் படைககப்பட்டவரால் இருக்கிறார். பழையன கழிந்து. புதியன புகுந்தன அன்றோ! இவை யாவும் கடவுளின் செயலே" (2 கெரி.5:17) (கட வுளின் திருவுன விருப்பத்தினை அறிந்தவர்களாகச் செயற்படும் போது எமது காரியங்கள் வெற்றி நிறைந்தவையாக அமையும் . இறையருளும் எம் செயல்களுக்கு பாதுகாப்பும் அனும் கேடையுமாக இருக்கும். ஆண்டவருக்கு நன்றி யுள்ளவர்களாக நாம் இருக்கிற போது.

### துன்பங்களே மகிழ்ச்சியின் படிக்கட்டுகள்

அன்புக்குரியவர்களே, துன்பததீயில் நீங்கள் சோதிக்கப்படும் போது ஏதோ எதிர்பாராது நேர்ந்து விட்டதென வியக்காதீர்கள் .மாறாக கிறிஸ்துவின் துன்பங்களில் இத்

#### அபிராஜன

துணை பங்கு கொள்கின் றீர்கள் என எண்ணியே மகிழுங்கள்''(1 போதிரு 4:12) கிறிஸ்துவின் பெயரின பொருட்டு துன்பங்களிலும் மகிழும் போதே எமக்கு பேறு கிடைககிறது. (நன்றியோடு கூடிய இறை வேண்டல மூலம் அறிவெல்லாம் கடந்த இறையமைதி நாம் அடைந்து கொளள லாம. கடவுளின் ஆவியானவரால் இயக்கப்படுகின்ற மக்களாக இருக்கும போதே நாம்கடவு ளுக்கு உரிய வா களாக இருக்கும் கடவுளே நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார்.

எனவே எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தும் ஆண்டவரின் வார்த்தைகளின் வல்லமையில் எம் பாதைகளைச் செம்மைப்படுததி என்றும் எங்கும் இறை புகழ்பாடும் மனுக்குலமாகச் செயற்கரியன செய்து ஆண்டவர்க்கு வழியை ஆயத்தம் செய்ய வரம் வேண்டுவோம்.

## போட்டிகளில் பங்குபற்றலாம்

தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவு எழுச்சிநாள் நிகழ்வின் ஒரு பகுதியாக திலீபன் ஞாபகார்த்த சுற்றுக் கேடயங்களுக்கர்க யாழ். மாவட்ட ரீதியில் உதைபந்தாட்டம் வலைப்பந்தாட்டம், ஆண் பெண களுககான தாச்சி, ஆண்களுக் கான சைக்கிள் ஓட்டம், ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டம் போன்ற நிகழ்வுகள் நடாத்தப்பட உள்ளன.

உதைப்பந்தாட்டப் போட்டிகளுக காகத்தெரிவு செய்யப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையும், ஏனைய போட்டிகள் யாவும் திறந்த போட்டி களாகவும் நடாத்தப்படவுள்ளன.

பங்கு பற்றிவிரும்பும் கழகங் கள, தனிநபர்கள் தங்கள் விண்ணப் பப்படிவங்களை பரமேஸ்வரா சந்தியிலுள்ள சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து எதிர் வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட் கப்பட்டுள்ளது. (ற)

## நடமாடும் செயலக சேவை

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/81 கோட்டை, ஜே/82 வண்ணாபண்ணை மற்றும் ஜே/83 கொடடடி ஆகிய கிராம சேவையாளர் பிரிகளிலுள்ள மக் களுக்கு வாக்காளர் இடாப் பில் பெயர் சேர்த்தல் மற்றும் தேசிய அடையாள அட டை பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றுக்கான நடமாடும்சேவை யொன்று எதிாவரும் 31 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் .கொட டி நமசிவாய வித்தியாலயத்தில நடை பெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வச முள்ள ஆவணங்களுடன் சமூகமளி தது இச்செயன்முறை யின்உச்சப பயன் பாட்டை பெற றுக கொள் ளு மாறு யாழ்ப்பாணப பிரதேச செயலாளர் பா.செந்தில் நநதனன் கேட்டுள்ளார். ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளன. (ற)

## வாய்க்குள் கண்ணுடன் ஆட்டுக் குட்டி! அகமதாபாத்தில் நடந்த அதிசயம்

(அகமதாபாத்)

அகமதாபாத்தில் 'இசான்பூர் பகுதியில் வாய்க்குள் கண்ணோடு பிறந்துள்ளது ஓர் ஆட்டுக் குட்டி. அந்த குட்டிக்கு ஒரே ஒரு கண் மட்டுமே உள்ளது.

தற்போது விலங்குகள் நல அமைப்பில் இருக்கும் இந்த ஆட்டுக் குட்டி. கடந்த செவ்வாய்க் கிழமை பிறந்தது. தற்போது உயிருக்குப் பேராடி வரும் குட்டி இயற்கையின் விநோதமான படைப்புத் தான்.

அதேசமயம், இந்த மாரிதி உறுப்புகள் வெவ்வேறு இடத்தில் மாறி அமைந்திருப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய இக் குட்டி வாய்ப்பாக இருக்கும் என அந்த அமைப்பின் ராகுல் பெகல் தெரி வித்தள்ளார். இந்த ஆட்டுக் குட் டியை எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாள் உயிருடன் வைத்திருக்க விலங்குகள் நல அமைப்பினர் முயன்று வருகின்றனர். எனினும் முக்கிய உறுப்புகள் இடம் மாறி இருப்பதால், உயிர் பிழைப்பதற் கான வாய்ப்புகள் மிக அரிது என் கின்றனர் அவர்கள்.

இந்த ஆட்டுக்கு இருக்கும் ஒரே யொரு கண்ணும் வாய்க்குள் இருபப தால் இதனால் எதையும் மெல்ல முடியாது. தற்போது குட்டியாக இருப்பதால் பரவாயில்லை. ஆனால் வளர வளர இது மென்று சாப்பிட வேண்டி இருக்கும். ஆனால் அது வரை அது உயிரோடு இருப்பது கேள்விக்குறியே.

இந்த ஆட்டுக் குட்டியை ஆனந்த பால்நடைமருத்துவக் கல்லூரி வசம் ஒப்படைப்பது குறித்து விலங் குகள் நல அமைப்பு பரிசீலித்து வருகிறது.

இந்தக் குட்டி நீண்ட நாள் இருக் கும் பட்சத்தில் ஆராய்ச்சிக்குப் பயன்படும் விதத்தில் மருத்துவக் கல்லூரிக்கு இதை அனுப்பபோவதாகவும் மேலும் ஆபத்து நேராத வகையில் அறுவைச் சிகிச்சை செய்ய முடியுமா என்பமு குறித்து பரிசீலிப்ப தாக வும் அவர் தெரிவித்தா. (து)

## தமிழ் நாடு அமைச்சரவையில் இரு புதிய அமைச்சர்கள்

(சென்னை)

தமிழக அமைச்சரவையில்2 பேர் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ள னர். சேலம் மாவட்டம் பனைமரத் மப்பட்டி தொகுதி எம்.எல்.ஏ.பி. விஜயலட்சுமி பழனிச்சாமி, பொள் ளாச்சி தொகுதி எம்.எல்.ஏ வி.ஜெயராமன் ஆகியோர் அமைச் சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்றனர்.

புதிய அமைச்சர்கள் பொள்ளச் சி வி. ஜெயராமன், பி. விஜயல ட் சுமி பழனிச்சாமி. பொள்ளாச்சி ஜெய ராமன் உணவுமற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட டுள்ளார். நிதி அமைச்சர் சி. பொன் னையன் பொறுப்பில் இருக்கும் உணவு, சிவில் சப்ளைஸ். நுகர் வோர் பாதுகாப்பு, உணவு விலைக் கட்டுப்பாடு,புள்ளியியல் துறை களும், அமைச்சர் செ.ம வேலுச்சாமி பொறுப பில் உள்ள கூட்டுறவுத் துறையும், ஜெயராமன் பொறுப்புக்குமாற்றப் பட்டுள்ளது.

பி.விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சர் பா. வளர்மதியின் பொறுப்பில் உள்ள பெண்கள் மற்றும் குழந் தைகள் நலன், சத்துணவு த்துறை. ஊனமுற்றோர் நலன், ஆதரவற்றோர் இல்லங்கள், பிச்சைக்காரர் விடுதிகள். சீர் தீருத்த நிர்வாகம் ஆகியவை அடங்கிய சமூக நலன் துறை விஜய லட்வுமியின் பொறுப் பு க்கு மாற்றப பட்டுள்ளது பா. வளா மதி ஊரகத் தொழில் அமைச்சர் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளார். வேளாண்துறை அமைச்சர் கே. பாண்டுரங்கன் பொறுப்பில் உள்ள குடிசைத் தொழில்கள், சிறு தொழில கள், காகிதாதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் ஆகியவை வளர்மிதியின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளது. (து)

## இந்தியச் செய்திகள்

### குண்டுவெடிப்பு

(புதுடில்லி)

மத்திய மகாராஜடாவில் ஹாபான் மற்றும் ஜால்ரா மாவட்டங்க ங்களில் இரண்டு மகுதிகளில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந் துள்ளதையடுத்து மும்பை நகரம் மிகவும் உசார் நிலையில் வைக் கப்பட்டுள்ளது.

இவ்விரு குண்டு வெடிப்புக் ளுக்கும் ஒரே குழுத்தான் பின்ன ணியில் இருந்தது என்பதைக் கண்டு பிடிக்க பொலீஸ் தீவிர விசார ணையில் ஈடுபட்டுள்ளது. (து)

## லொறி உரிமையாளர் தொடர்ந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(புதுடில்லி)

இந்தியாவில் ஒரு வார காலமாக நடை பெற்று வந்த லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட் டது.

நேற்று முன்தினம்லொறி உரிமையாளர் சங்கத்தின் பிரதி நிதிகளுக்கும் நிதி மற்றும் வருவாய்த் துறை அதிகாரி களுக்கு மிடையில் 9 மணி நேரமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் முடிவில் உடன் பாடு ஏற்பட்டது.

வருவாய்த்துறைச் செயலர் திருமதி வினிதா ராகு, அகில இந்திய மோட்டார். போக்கு வரத்துக் காங்கிரஸ் தலைவர் பூமாலை ஆகியோர் உடன் படிக்கையில் கையொப்ப மிட்டனர். உடன் படிக் கையின்படி 9பேர்கொண்ட உறுப்பின் கமிட்டியும் அமைக்கப்பட்டது. (து)

## உலக வங்கியின் நிதி உதவி

(வாஷிங்டன்)

நீர் ஆதாரத் திட்டங்களைச் செயல்படுத்த இந்தியாவுக்கு ரூ.500 கோடி நிதியுதவி அளிக்கப் படும் என்று உலக வங்கி கடந்த புதன் கிழமை அறிவித்துள்ளது.

இத் திட்டம்2-வது கட்டமாக கோவா, இமாசலம், புதுச்சேரி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இந்நிலையில் அரசு மற்றும் தனியார் துறையினர் மூலம் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு நீர் ஆதாரங்களைப் பெருக்கவும், நீர்வள மேம் பாட்டு திட்டங்களை செயல்படுத்தவும் இந்த நிதி யுதவி அளிக் கப் படுவதாக உலக வங்கி தெரிவித் துள்ளது. (து)

## காசநோயை குணப்படுத்த புதியமருந்து கண்டுபிடிப்பு

### முதற்கட்ட சோதனைகள் வெற்றி

(சென்னை)

காச நோயை குணமாக்குவதற காக புதிய மருந் தொன்றை இந் திய விஞ்ஞானிகள் கண்டுபிடிததுள்ளனர்.

லக்னோவில் உள்ள மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவன விஞ் ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட இம் மருந்து காச நோய்க்குச் காரண மான மைகக்கோ பக்பீரியம் என்ற கிருமியை தாக்கி அழித்து விடுகிறது.

"திகோண்டிடேட்" எனப் பெயரிடப் பட்டிருக்கும இம் மருந்தின் மூலம்விலங்குகள் மீது மேற் கொள்ளப் பட்ட முதலாவது சோதனை வெறறி யளித்துள்ளது.

காச நோயால் ஏற்படும் இறபபை தவிர்ப்பதுடன் கிருமியின் தாக்கத் தையும் கட்டுப் படுத்துவதே இம் மருந்தின் பிரதான செயற்பாடாகக் காணப்படுகிறது. (ப)

# தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர்
# தென்னாபிரிக்க வீரர் ரிச்சர்ட்ஸ் புகழாரம்

உலகத்தின் தலைசிறந்த துடுப்பாட்ட வீர் சச்சின் டெண்டுல்கர் தான் என்று தென்னாபிரிக்காவின் முன்னாள் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான பேரி, ரிச்சர்ட்ஸ் கூறியுள்ளார்.




அண்மைக் காலங்களில் டெண்டுல்கரின் துடுப்பாட்டத் திறன் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவிவரும் சூழ் நிலையில், தலை சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான பேரி ரிச் சாட்ஸ் அவரது திறமையை மனம் திறந்து பாராட்டியிருப் பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது முத்தரப்பு ஒரு நாள் போட்டிகள் நடைபெற் றுக் கொண்டிருக்கும் நெதர் லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நக ருக்கு வருகை தந்துள்ள பேரி ரிச்சர்ட்ஸ் பத்திரிகையாள ருக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;


உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக இன்னும் டெண்டுல் கர்தான் தொடர்ந்தும் இருந்து வருகிறார். டெண்டுல்கருக்கு வயது ஏறுவதால், முன்பைவிட தற்போது 'ஸ்கொயர் திசையில் அதிகமான பந்துகளை அடிக்கிறார்'.

ஒரு துடுப்பாட்ட வீரருக்கு வயது முதிர்ச்சியாகும்போது, ஸ்கொயர் திசையில் அதிகமான பந்துகளை விளையாட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இளம் வீரரைப் போல கண்ணில் படும் பந்துகளையெல் லாம் ஓட்டங்களாக மாற்றிவிட முடியாது. பந்துகளை, லேசாக ஷாட் அடிப்பதைவிட, அது வரும் வேகத்தில் திருப்பிவிட்டு அதிக ஓட்டங்களைப் பெறுவது நல்லது.

தற்போதைய இளம் பந்துவீச்சாளர்கள் நன்றாக பந்து வீசுகின் றனர். அவர்கள் மாறுபட்ட (லைன் அன்ட் லென்க்) அளவுகளில் பந்து வீசுகின்றனர். இருந்த போதிலும், டெண்டுல்கர் தான் சிறந்த துடுப்பாட்ட வீரராக இன்னமும் இருந்து வருகிறார். அவர் விக் கெற்றைச் சுற்றி அனைத்துக் கோணங்களிலும் பந்தை அடிக் கும் திறமையுடை யவராக இருப்பதால் தான் உலகின் தலைசிறந்த துடுப் பாட்ட வீரராக இன்னும் இருந்து வருகிறார் என்றார்.

கடந்த 10ஆண்களுக்கும் மேலாக உலக நாடுகளுக்கு எதிரான போட்டி களில் பங்குகொண்டு பந்துவீச் சாளர்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்தி வரும் சச்சின் டெண்டுல்கர், முழங்கை வீக்கத்தால் பாதிக்கப் பட்டதால் இத் தொடரில் பங்கேற் கவில்லை.

31வயதான டெண்டுல்கர் இது வரை 339 ஒருநாள் சர்வதேச போட் டிகளில் கலந்துகொண்டு 13ஆயி ரத்து 415 ஓட்டங்களைக் குவித்தி ருக்கிறார். இதில் 37,சதங்களை அடித்து சாதனை படைத்திருக்கிறார். தவிர டெஸ்ட் போட்டியில் 10ஆயி ரம் ஓட்டங்களை அவர் நெருங்கிக் கொண்டிருக்கிறார். (ந-7)



ஆணகளுக்கான 105கிலோ பளுதூக்குதல் போட்டியில் உலக சாதனை படைத்த தோடு தங்கப்பதக்கமும் வென்ற ஈரானிய வீரர் ஹுசைன் ரேஸா ஜபே போட்டியின் போது.



படத்தில் இருப்பது ஒருவர் என நீங்கள் நினைத்தால் ஏமாந்து போவீர்கள். ஒலிம்பிக்கில் நீச்சல் சாகஸப் போட்டியில் நீருக்கடியில் காலை நீட்டியபடி அனஸ்தாசியா டேவிடோவா, கையை நீட்டுபவர் அனஸ் தாசியா எர்மகோவா. நீச்சல் சாகஸத்தில் தங்கம் வென்றது இந்த ரஷ்ய ஜோடி.

# யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் இறுதிச் சுற்றுப்போட்டிகள்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தக் வங்கி ஆகியவற்றின் ஆதரவில் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் தாச் சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி,இன்று ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 4.00மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத் தில் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க அங்கத்தவர் செ.சண்முகலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் பெண்களுக்கான போட்டியில், பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து, இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் இணுவில் கலாஜோதி விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து, நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணி விளையாடவுள்ளது.

சிநேகபூர்வ போட்டியாக ஆண்கள் அணிகளிடையே நடைபெறவுள்ள போட்டியில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதவுள்ளது.

இறுதியில் வெற்றிபெற்ற அணிக்ளுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.




ஒலிம்பிக் பெண்களுக்கான 500 மீற்றர் குழுப் படகு வலித்தல் போட்டியில் ஜேர் மனி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது. இந்தக் குழுவை வழி நடத்திச் சென்ற பர்கிட் பஷ்கருக்கு ஒலிம்பிக்கில் இது எட்டாவது தங்கம். [illegible]த மகிழ்ச்சியைத் தான் இப்படி வெளிப்படுத்துகிறார்.

## விளையாட்டு செய்திகள்

# 200 மீற்றர் ஓட்டத்தில் கேம்பலுக்கு தங்கப்பதக்கம்

ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 200மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்கா வீராங்கனை வெரோனிகா கேம்பல் தங்கப் பதக்கத்தைப் பெற்றிருக் கிறார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களுக்கான 200மீற்றர் ஓட்டப் போட்டி யில் 22.05விநாடிகளில் இலக்கைக் கடந்து ஜமைக்கா வீராங்கனை வெரோனிகா கேம்பல் தங்கப பதக்கத்தை வென்றார். ஒலிம்பிக் போட்டிகளில் ஜமைக்கா பெற்ற இரண்டாவது பதக்கம் இது. ஏற்கனவே 100மீற்றர் ஓட்டத் தில் ஜமைக்க வெண்கலப் பதக்கத்தை பெற்றிருக்கிறது.

வெள்ளிப் பதக்கத்தை 22.18வினாடிகளில் கடந்த 18வயது அமெரிகக வீராங்களை அலிசன் பெலிக்ஸ் கைப்பற்றினார். பஹாமாஸ் வீராங்கனை டெபபெர்கஸன் 22.30வினாடிகளில் கடந்து வெண்கலம் வென்றார். (ந-7)




1996 அட்லாண்டா, 2000 சிட்னி போட்டிகளைத் தொடர்ந்து 2004 எதென்ஸ் போட்டியிலும் நடைப் போட்டியில் தங்கம் வென்ற போலாந்து வீரர் சோர்சனெய்வசிசி வெற்றிக் கோட்டைத் தாண்டிவிட்ட மகிழ்வில் கை அசைக்கிறார். 50 கிலோ மீற்றர் நடைப்போட்டியில் அவர் பெற்ற இத்தங்கப் பதக்கம் ஒலிம்பிக்கில் அவர் பெற்ற நான்காவது பதக்கமாகும்.

# நியூசிலாந்து ஒலிம்பிக் வீரர்கள் ஒலிவ் இலைகளைக் கொண்டுவரத் தடை

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டு பதக்கம் பெற்ற வீரர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஒலிவ் இலை வளையத்துடன் நாடு திரும்ப முடியாது என்றும், இலைகள் மற்றும் அதனுடன் வழங்கப்படும் மலர்க் கொத்துக்களை எதென்சிலேயே விட்டுவிட்டு நாடு திரும்புமாறும் நியூசிலாந்து அரசு உத்தரவிட் டுள்ளது.

எதென்சில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும் வீரர்களுக்கு பதக்கத்துடன் ஒலிவ் வளையம் வழங்கப்படுகிறது. இதை கிரீஸ் பெருமையாகக் கருதுகிறது. வீரர்களும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றனர்.

இது தொடர்பாக நியூசிலாந்து விவசாய அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தகவல் அளிக்கையில்,

நியூசிலாந்தில் உள்ள உயிர்வளப் பாதுகாப்பு மிக முக்கியமானது. அதை எங்களால் மீற முடியாது. நினைவுகளுக்காக வேண்டுமானால் வீரர்கள் போட்டோ எடுத்துக் கொள்ளட்டும் என்றும், வீரர்கள் அவற்றை நாட்டிற்குள் கொண்டுவர அனுமதித்தால் 'முளைக்கக்கூடிய பொருள் அதில் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அது இங்கு வேர்விட்டுப் பரவிவிடும். அதனுடன் பூச்சிகளையும், நோய்களையும் கொண்டு வந்துவிடும். அது பிற தாவரங்களுக்கும் தொற்றிவிடும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

1936இல் ஜேர்மனியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற ஜேக் லவ்லாக், ஹிட்லரிடமிருந்து ஓக் மரக்கன்றைப் பெற்றார். நியூசிலாந்து திமரு ஆண்கள் பள்ளியில் நடப்பட்ட அக்கன்று மரமாக காட்சி அளிக்கிறது. இதுபோன்ற மரக்கன்றுகள் ஏதும் எதென்ஸில் வழங்கப் படாவிட்டாலும், வீரர்களுக்கு பதக்கத்துடன் வழங்கப்பட்ட ஒலிவ் வளையத்தில் அச்செடிக்கான விதை ஏதும் இருந்தால் அது பிரச்சினையாகிவிடும் என்பதே நியூசிலாந்து அதிகாரிகளின் அச்சமாகும். (ந-7)

ATHENS 2004 MEDALS

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 29 | 34 | 27 | 90 |
| சீனா | 28 | 17 | 13 | 58 |
| ரஷ்யா | 17 | 23 | 30 | 70 |
| அவுஸ்திரேலியா | 17 | 13 | 16 | 46 |
| ஜப்பான் | 15 | 10 | 10 | 35 |
| ஜேர்மனி | 14 | 15 | 18 | 47 |
| பிரான்ஸ் | 11 | 07 | 11 | 29 |

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை - குறள்

வலம்புரி

# ஜே.வி.பி. இருக்கும்வரை சமாதானம் எட்டாக்கனி

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்மை சமாதான ஏற்பாட்டாளர் என்ற பதவியில் இருந்து உடன் விலக்குமாறு நோர்வே அரசிடம் ஜே.வி.பி. கோரியுள்ளது.

நோர்வே அரசுக்கு ஜே.வி.பி. அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், சமாதான ஏற்பாட்டாளர் பதவியில் இருந்து எரிக்சோல்ஹெய்மை பதவி நீக்கம் செய்யாதுவிடின் சமாதான முயற்சியில் இருந்து நோர்வே அரசு உடனடியாக விலகிக் கொள்ள வேண்டும் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக எரிக்சோல் ஹெய்ம் செயற்படுகின்றார். விடுதலைப் புலி உறுப்பினர்களை தனது நாட்டிற்கு அழைத்துச் சென்று ஆயுதப் பயிற்சிகளை வழங்குகின்றார் என்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஜே.வி.பி. முன் வைத்துள்ளது. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் வகையில் சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படும்படி இலங்கை அரசு விடுத்த அழைப்பை ஏற்றே நோர்வே அப்பணியில் ஈடுபட்டது.

மிகவும் கடினமானதும், சிக்கலானதுமான பிரச்சினையில் நோர்வே அரசு தலையிட்டு சமாதானத்தை அடைவதற்காக பாடுபடுவதற்கு எவ்வித சுயநலனும் இல்லை என்பது ஜே.வி.பியினர் போன்ற இனவாதிகளைத் தவிர்ந்த வேறு எவரும் நன்கறிவர்.

அபிவிருத்தியடையாத - வறுமைப்பட்ட சிறிய நாடான இலங்கை இனவாத மாயைக்குள் சிக்குண்டு தவிப்பதையும், அதனால் அருமந்த மனித உயிர்கள் காவுகொள்ளப்படுவதையும் பொறுக்க முடியாமலே சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட நோர்வே அரசு சம்மதித்தது.

அமெரிக்கா, இஸ்ரேல், பிரிட்டன், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கையில் இனவாதத் தீயை வளர்த்து அதனூடே ஆயுத விற்பனையை மேற்கொள்ளுகின்றபோது, இரு தரப்பினரின் சம்மதத்துடனும், கோரிக்கையுடனும் இனப்பிரச்சினையில் தலையிட்ட நோர்வே அரசுக்கு ஜே.வி.பீ. சூடும் குற்றச்சாட்டுக்கள் அபத்தமானவையாகும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தூதுவராக இருந்த பல சுற்று பேச்சுக்களை நடத்தி யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல் படுத்துவதில் எரிக்சோல்ஹெய்ம் ஆற்றிய பணி காத்திரமானதாகும்.

எரிக்சோல் என்றொரு தூதுவர் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடாமல் இருந்திருந்தால் இலங்கையில் தற்போது மனித உயிர்களை பாதுகாக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கை என்பது சாத்தியமாகி இருக்குமா? என்பது சந்தேகமே.


இவ்வாறு கடந்த இரு வருடங்களாக யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஊடாக வெடிச் சத்தத்திற்கு ஓய்வு கொடுத்த ஓர் தன்னலமற்ற தூதுவரை உடனடியாக பதவி விலக்கல் செய்யுமாறு கேட்பது உலகில் எங்குமில்லாத அநாகரிகச் செயலாகும்.

ஜே.வி.பியை பொறுத்தவரை அரசாட்சியை கைப்பற்றுவதே அதன் நோக்கமாகும். அதற்காக, அந்த கட்சிக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு ஆயுதம் நாட்டில் இனவாத தீயை மூட்டிவிட்டு அதனூடே வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதாகும்.

சமாதானம் நாட்டில் ஏற்படுமாயின் - அமைதி நிலை வழமைக்குத் திரும்புமாயின் ஜே.வி.பி போன்ற இனவாதிகளின் முகவரிகள் கிழிக்கப்பட்டுவிடும். இந்த அச்சத்தின் மத்தியில் சமாதான முயற்சியை குழப்பும் வகையில் எரிக்சோல் மீது குற்றச்சாட்டுக்களை ஜே.வி.பி. சுமத்துகிறது. ஆக, ஜே.வி.பி என்ற அமைப்பு இருக்கும் வரை சமாதானம் என்பது எட்டாக் கனியாகவே இருக்கும்.

# பழகுதற்கினிய பண்பாளர்

# அமரர் இரட்ணசபாபதி அவர்கள்



உயர்ந்த தோற்றம்; அன்பின் ஈர்க்கை கொண்ட கண்கள்; அரவணைக்கும் கரம்; விருந்தோம்பும் பண்பு இவை யாவற்றையும் தன்னகத்தே கொண்டவர் அமரர் இரட்ணசபாபதி ஐயா அவர்கள்.

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய அறங்காவலர்களில் ஒருவராக இருந்து ஆலயப் பணியும், சமூகப்பணியும் ஆற்றிய இரட்ணசபாபதி ஐயா அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லையாயினும், அவரோடு பழகிய நினைவுகள் அவரின் தோற்றத்தை நம் கண்முன் நிழலாடச் செய்கின்றது.

அல்லைப்பிட்டி உப தபாலகத்தின் தபாலதிபராகப் பல வருடங்கள் கடமையாற்றிய அவர், அகில இலங்கை உப தபாலதிபர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தாரெனில் அவரின் தலைமைத்துவம், ஆளுமைத்திறன் எத்தகையதென்பதை எவரும் உணர்ந்துகொள்ளமுடியும்.

இன, மத, மொழி கடந்த தூரநோக்குடைய இரட்ணசபாபதி அவர்களிடம் இருக்கக்கூடிய மிகச்சிறந்த ஆற்றல் எவரையும் தன்வசப்படுத்தும் நட்பியல்பாகும்.

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தின் அறங்காவலராக இருந்த அமரர் அவர்கள் ஆலயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்.

ஆலய உள் மண்டபத்தில், நாத ஒலியில் தன்னை மறந்து, உள்ளம் உருகி விநாயகனை இறைஞ்சும் அவரின் வழிபாட்டு முறைமை திருவெண்காட்டு விநாயகன்பால் அவர் கொண்ட அன்பின் வெளிப்பாடாகும்.

போஸ்ட் மாஸ்ரர் (**Post Master**) என்று எல்லோராலும் அழைக்கப்படும் அமரர் இரட்ணசபாபதி அவர்களைத் தெரியாதவர்களே இருக்க முடியாதென்றால் அது மிகையன்று.

சமாதான நீதிவானாக இருந்து அல்லைப்பிட்டி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த அமரர் அவர்கள், நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக தனது சொந்த மண்ணை விட்டு தனது பிள்ளைகளுடன் பிரான்ஸில் தங்கியிருந்தார்.

அவர் அங்கு தங்கியிருந்த பொழுதும் அவான் நினைவுகளிலெல்லாம் மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகனே நிறைந்திருந்தான்.

அவரின் உயிர் பிரிகின்ற போதும் அந்த நினைவுகளே வெளிப்பட்டன என்பதை அறியும்போது நெஞ்சம் நெகிழ்கின்றது.

ஆலயத்தின் வளர்ச்சியைக் காணத்துடித்த அமரர் அவர்கள் இன்று நம் அருகில் இல்லையாயினும், அவரின் உள்ளத்தில் உதித்த "சித்திரத் தேர்" நனவாகியுள்ளது.

பதின்மூன்று ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற மஹோற்சவத்தில் சித்திரத்தேரில் திருவெண்காடன் வலம் வந்த அந்தச் திருக்காட்சியை இரட்ணசபாபதி ஐயா அவர்களும் வான் வெளியில் நின்று கண்டு களித்திருப்பார் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

மண்டைதீவு திருமுறைக்கழகத்தின் போஷகராக இருந்து மன்றத்தின் செயற்பாட்டிற்கு பெரும் பணியாற்றிய அவரின் சான்றாண்மைத் திறன் என்றும் நமக்கு வழிகாட்டும்.

திருவெண்காட்டு விநாயகனின் அருளல் திருவிழாவாகிய இன்றைய தீர்த்தத் திருவிழாவில், அமரர் இரட்ணசபாபதி அவர்களை நினைவுகூர்ந்து அவரின் ஆன்மா நித்திய பேரின்பத்தில் திளைப்பதாக.

**விஜயன்**

# இலங்கை உள்ளிட்ட இந்துசமுத்திர

# பிராந்திய நாடுகளின் அபிவிருத்திக்கு சீனா 200 மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

இந்துசமுத்திரப் பிராந்திய ஒத்துழைப்புக்கான சுற்றுவட்ட அமைப்பின் அமைச்சர்கள் மட்ட மகாநாடு கொழும் பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அமைப்பின் தலைவரும் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் இந்தியத் துணை வெளிவிவகார அமைச்சர் அகமட் மற்றும் தென்னாபிரிக்கா, ஈரான் ஆகியவற்றின் துணை வெளிவிவகார அமைச்சர்கள் உட்பட 18 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொணடனர்.

பிராந்திய நாடுகளிடையே உல்லாசப் பயணத்துறை, மீன்பிடித்துறை என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு விசேட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதுடன், இதற்கான நிதியம் ஒன்றையும் ஆரம்பிப்பதென இம் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்துசமுத்திரப் பிராந்திய ஒத்துழைப்புக்கான சுற்றுவட்ட அமைப்பின் அடுத்த மாநாட்டை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு ஈரானில் நடத்துவதற்கும் இம மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கிடையில், பிராந்திய நாடுகளுக்கு இடையில் மீன்பிடித்துறையினை அபிவிருத்தி செய்வது குறித்த திட்டங்களை ஆராயும் கூட்டம் ஒன்றை எதிர்வரும் டிசம்பர் மாதம் ஓமானில் நடத்துவதெனவும் இணக்கம் காணப்பட்டது.

இது இவ்வாறிருகக, பிராந்திய நாடுகளின் 'அபிவிருத்திக்கு 200 மில்லியன் டொலர்களை கடனாக வழங்க சீனா முன்வந்துள்ளது.

சீனா, எகிப்து,ஜப்பான் மற்றும் பிரிடடன் ஆகிய நாடுகள இந்த அமைப்பில் அங்கத்துவம் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், மேற்படி மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் சி. பண்டாரி கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைபபு வழங்கத் தயாராகவே இருக் கின்றது. அத்துடன், இலங்கையுடன் எல்லா வகை யிலும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கும் இந்தியா விரும்புகின்றது.

ஆனால், மீன்பிடித் தொழிலாளர்களின் பிரச்சினை கள் இந்த உறவுக்கு ஆபத்தாகி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

(ந-க,64)

# மின்சாரசபையை 9 பகுதிகளாக விற்க அரசு முயலுகின்றதாம்

## ஐ.தே.க. எம்.பி.ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

மின்சாரசபையை ஐககியதேசியக்கட்சி விற்பனை செய்யப் போவதாக அன்று கூறிய ஐ.ம.சு.கூட்டமைப்பு, இன்று அதனை ஒன்பது பகுதிகளாகப் பிரித்து விற்பனை செய்யத் திட்டமிட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவிதுள்ளார்.

அண்மையில் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள அமைச்சர்கள் தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

ஆடைக கோட்டாமுறை முடிவடைந்ததன் காரணமாக இவ்வருட இறுதிக்குள் சுமார் ஒன்றரை இலடசம் இளைஞர்,யுவதிகள் வேலைவாய்ப்பினை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றிருந்தால், தற்போதுள்ள நிலையில் அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டிருக்கும்.

சமாதானப பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாமல் வெளிநாடுகளில் இருந்து எந்தவொரு நிதியுதவியும இலங்கைக்குக் கிடைக்காது.

இந்தப் பிரச்சினைக்குப் பிரதான காரணமாக கூட்டமைப்பு அரசாங்கத்தின் இரு கொள்கைகளுடனான செயற்பாடே காரணம் என அவர் மேலும் குற்றம்சாட்டியுளளார்.

(ந-க,121)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**மனிதன் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. அதுதான் துன்பத்தின் காரணம. ஆனால் அதுதான் எல்லா நன்மைகளுக்கும் கூடக் காரணமாக இருக்கிறது. அதுதான உண்மையான அடையாளம். இந்த உலகால் எப்படித் திருப்தியடைய முடியும்? நாளையே இந்த உலகம் சொர்க்கம் ஆகுமேயானால் 'இதை எடுத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு வேறு ஏதாவது தாருங்கள்' என்று தான் சொலவோம்.**

**சுவாமி விவேகானந்தர்**

# இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த முறையான கொள்கை பின்பற்றப்பட வேண்டும்

## பாக். மத்திய வங்கி ஆளுநர் ஆலோசனை

(கொழும்பு)

மாறுபட்ட கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டில முறையான பொருளாதாரச் செயற்றிட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென பாகிஸ்தானின் மத்தியவங்கி ஆளுநர் கலாநிதி இஸன்உசைன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 54 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவிகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்றவகையில புத்திஜீவிகளை இங்கு உருவாக்க வேண்டுமானால் கல்வித துறையில் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவது அவசியமாகும்.

எழுத்தறிவு வீதம் அதிகம் கொண்ட இலங்கை போன்ற நாட்டில் தொழில்வாய்ப்பின்மை அதிகரித்துக் காணபபடுவது கவலைக்குரிய விடயமென குறிப்பிட்ட அவர், ஒரு காலத்தில்பாகிஸ்தானும் இந்த வகையான சிக்கலுக்கு முகம கொடுத்ததாகக் கூறினார்.

தனியார் கல்வி நிறுவனங்களுக்குத் தொழில் சார் பட்டதாரிகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கி கல்வித்துறையை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும்.

அத்துடன், நாளுக்கு நாள் அதிகரிக்கும் மக்களின் தேவைகளுக்கும் அரசாங்க நிறுவனங்களால் தேவைகளைப பூர்த்தி செய்யும் திறன் குறைவடைவதற்குமான நீண்ட இடைவெளியை இல்லாமல் செய்வதே தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரசசினையாகும்.

'உண்மையில் கிழக்காசிய நாடுகளை எடுத்துக் கொண்டால், தெற்காசிய நாடுகளை விட அந்நாடுகள் பொருளாதார நிலையில் உயர்ந்து காணப்படுகின்றன.

சீனா, இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகள எம்மை விட பொருளாதார ரீதியில் முன்னிலையில் உள்ளன. குறிப்பாக வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்றவற்றை இல்லாமல் செய்வதற்கு கிழக்காசிய நாடுகளிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய நிலையுள்ளது.

விசேடமாக கைத்தொழில் உலகில் முதன்மை பெற்று வரும் சீனாவில், பொருளாதார சௌபாக்கியததை ஏற்படுத்துவதற்காக சீன அரசாங்கம் தெளிவான கொள்கையையும், வழிமுறைகளையும்கொண்டுள்ளது என்றும அவர் மேலும குறிப்பிட்டார்.

(ந)

## ஷெல்காஸின் விலை 103 ரூபா. அதிகரிப்பு

(கொழும்பு)

ஷெல்காஸ் சமையல் எரிவாயுவின் விலை மேலும் நூற்றி மூன்று ரூபாவினால் அதிகரிக்கப்படவிருப்பதாக ஷெல்காஸ் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விலை அதிகரிப்புத் தொடர்பாக தாம் நுகர்வோர்துறை அமைச்சரிடம் மனு ஒன்றை சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது 690 ரூபாவாகவுள்ள எரிவாயுக் கொள்கலனின் விலை இனிமேல் 793 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் ஒருமாத.காலப் பகுதிக்குள் எரிபொருட்களின் விலை மேலும் உயரக்கூடும் என ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ந-8)

## எழுதுவினைஞர்களுக்கு விரைவில் கணனிப் பயிற்சி

(கொழும்பு)

அரசாங்கத்துறையில் கடமையாற்றும் சகல எழுதுவினையர்கள் மற்றும் அதற்கு இணையான ஊழியர்களுக்கு கணனிப் பயிற்சியை வழங்க பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, அடுத்த 4 மாதங்களில் இவர்களுக்குப் பயிற்சிப் பாடநெறியை வழங்குவ்தற்குரிய வகையில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ந-க,61)

## 14 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டம்

# யாழ். மத்திய கல்லூரி அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் நடாத்திய 14 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 10 பாடசாலைகள் பங்கு பற்றிய இப் போட்டித் தொடரில் 2 குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்றது. இறுதிப் போட்டிக்கு மத்திய கல்லூரி அணியும், புனித பத்திரிசியார் கல்லூரி அணியும் தெரிவாகின.

யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பத்திரிசியார் கல்லூரி அணி சகல விக்கெற்றினையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி 7 விக்கெற்றினை இழந்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இவ்வாட்டத்தில் ஆட்டநாயனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் மத்திய கல்லூரி அணித் தலைவர் ம. மயூரன் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் சிறந்த பந்துத் தடுப்பாளராக ஜே. ஜேம்ஸ்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ். இரவீந்திரா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(இ-43)

# தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தொண்டர் ஆசிரியர் சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளன. இதற்காக நாடு முழுவதிலுமுள்ள தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து, தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படுமென்று கல்வி அமைச்சு விடுத்துள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-8)

## தீர்த்தோற்சவம் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் இன்று காலை நடைபெறும். காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் காலை 9.15 மணிக்கு தீர்த்தமாடலும் இடம்பெறும்.

இரவு 9.00 மணிக்கு கொடியிறக்கம் நடைபெற்று சுவாமி வீதியுலா இடம்பெறும்.

(ந)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் புத்தாடெப் தாஸ் குப்தாவின் நெறியாள்கையில் உருவான லல் தறஜா (சிவப்புக் கதவு) என்ற வங்க மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், இணைவாக தேவி வந்தனா எனும் நாட்டிய நிகழ்வுப் படமும் காண்பிக்கப்படவுள்ளது. இந் நாட்டிய நிகழ்வான ஒடிசி, கதக், பரதம் மற்றும் மணிப்புரி ஆகிய நடன முறைகளை இணைத்து உருவாக்கப்பட்ட படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

(ந)

## முழுநிலா கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையம் மாதாந்தம் பௌர்ணமி தினங்களில் நடாத்தி வரும் முழுநிலாக் கருத்தரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 'சிறுவர்களின் உரிமைகளும் கடமைகளும்' என்ற தலைப்பில் யுனிசெவ் நிறுவன உதவி 'சிறுவர் பாதுகாப்பு அதிகாரி வாசுகி ஜெயசங்கர் கருத்துரை வழங்கவுள்ளார்.

(ந-7)

## சந்திக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இசைத்துறையில் பயிலும் முதலாம் இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களையும், சங்கீதத்துறை உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் இன்று காலை 8 மணிக்கு, கல்லூரியில் இசைத்துறை விரிவுரையாளர் திருமதி வி.நரேந்திராவை சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(இ)

## மட்டு. எம்.பி. யாழில்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி மற்றும் அரியனேந்திரன் ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் யாழ். எம்.பி. எஸ். கஜேந்திரனுடன் இணைந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, செம்பியன் பற்று, உடுத்துறை, மாமுனை ஆகிய பகுதிகளுக்கு சென்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை இவர்கள் இன்று வடமராட்சி கிழக்கு குடத்தனை அம்பன் ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

(இ-43)

### ஜெனீவா...

ஆராயப்பட்டது.

இம் மாநாட்டில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் மூத்த பெண் போராளிகளான இருவரும் கண்ணி வெடி பற்றிய தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

(ந-க)

### தகவல்...

களை வழங்கி வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

உட்கட்சி பூசல்கள் காரணமாகவே எதிரிகளை கொலை செய்வதும், மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களை கொலை செய்வதும் தொடர்கிறது. இந் நிலையில் இராணுவத்தினர் ஒரு சில பிரிவினரிடம் இருந்து தகவல்களை பெறும் போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு உண்டு என்றும் திலக் ரணவிராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

**உலக தாவர உணவுத்தினம்**

வெள்ளி நாள் விரதம் உலக தாவர உணவுத் தினமாக வளம்பெறவும்; உலக சமாதானமும் சாந்தியும் பெற வழிகாட்டுக.

இலங்கை அரசால் போயாதின விடுமுறை தினத்தில் பின்பற்றும் மது, மாமிச உணவு முறைகளுக்கான தடைமுறைகள் வெள்ளிக்கிழமைகளிலும் சகலரும் பின்பற்ற வழிகாட்டுக.

இந்து அரச ஊழியர்கள் இணையம்

வே.கே.தனபாலன்.
இணைப்பாளர் - வவுனியா

(8765)

### தமிழ் இளைஞர்...

மான உத்தியோகபூர்வ தகவல்களும் கிடைக்கப்பெறாவிட்டாலும் கொலை செய்யப்பட்ட நபர் இராணுவப் புலனாய்வு துறையினர் உள்சென்று ஊடுருவித் தாக்கும் அணியில் முன்னர் இருந்து வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுட்டுக் கொலை செய்யப்பட்ட நபர் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்தவர் என்றும் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கி வருபவர்களில் முக்கியமானவர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இக் கொலை தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படாவிட்டாலும் தீவிர புலன் விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க அண்மைக்கால படுகொலைகள் அரசின் பொறுமையைப் பரிசோதிப்பதாக இருக்கிறதென அமைச்சர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவித்த 48 மணி நேரத்தில் இக் கொலைச் சம்பவம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

### நாட்டில்...

தகவல் தருகையில்,

பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையிலான அதிகாரப் போட்டிகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு இடையே ஏற்பட்டுள்ள உள் விவகாரங்களுமே இக் கொலைகளுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளனவென்று புலன் விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.

இவ் வருட ஆரம்பம் முதல் கடந்த 7 மாதங்களில் மட்டும் 738 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பு பொலிஸ் பிரிவில் 47 கொலைச் சம்பவங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 39 கொலைச் சம்பவங்களும், காலி மாவட்டத்தில் 44 கொலைச் சம்பவங்களும், நுகேகொடவில் 38 கொலைச் சம்பவங்களும், தங்காலையில் 38 கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(ம)

### புரிந்துணர்வு...

பட்ட திஸ்ஸ வீரசிங்கம் துஷ்யந்த குமாரின் கொலை தொடர்பாக இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக் கொலை தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது,

தற்போது இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ளது. இந் நிலையில் இராணுவத்தினருக்கு தகவல் கொடுப்பவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கும் நிலையில் இராணுவம் இல்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அவசரகால விதிகளின் கீழ்வரும் சில அதிகாரங்கள் பாதுகாப்புப் படையினரிடம் இருந்து எடுக்கப்பட்டுவிட்டது.

இந் நிலையில் அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த 30 மாதங்களுள் இராணுவத்திற்கு தகவல் வழங்கிய 21 பேர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இக் கொலைகள் பெரும்பாலும் கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலுமே நடைபெற்றிருப்பதால் இக் கொலைகள் தொடர்பாக நாம் கவனம் எடுத்திருக்கின்றோம் என்றும் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

(ம)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.